மன்றம்

இரா. நெடுஞ்செழியன், எம்.ஏ.

மலர் 4 | 15 - 2 - 56 | இதழ் 2



அண்ணா - ஆச்சாரியார் அறிமுகம்!

இருபதாண்டு காலத்திற்கு முன்பு அன்பர் சக்ரவர்த்தி இராசகோபாலாச்சாரியார் அவர்களும், அறிஞர் அண்ணா அவர்களும் ஒருவரையொருவர் நேர்முகமாகக் கண்டுகொள்ளும் வாய்ப்பு ஏற்பட்டது. சென்னை ஒய். எம். சி. ஏ. விவாத அரங்கு ஒன்றிற்கு அன்பர் ஆச்சாரியார் தலைமை வகிக்க, அறிஞர் அண்ணா அவர்கள் விவாதத்தில் கலந்துகொண்டு சொற்பொழிவாற்றினார்கள். அதுதான் இருவர்க்கிடையேயும் ஏற்பட்ட முதல் அறிமுகம். என்றாலும், அந்த அறிமுகம் அனபர் ஆச்சாரியாரின் நீடித்த நினைவில் 'பதிந்திருக்கத் தக்கதாக அமையவில்லை.

அண்மையில், அதாவது 28—1—56 இல், அறிஞர் அண்ணா அவர்களும், அன்பர் ஆச்சாரியார் அவர்களும் ஒருவரையொருவர் நேர்முகமாகக் கண்டுகொள்ளும் வாய்ப்பு ஏற்பட்டது. இந்த அறிமுகம் நினைவில் இறுத்தத்தக்க அறிமுகமாக அமைந்தது என்னலாம்.

சென்னைத் தமிழ்க்கலை மன்றத்தைச் சார்ந்த தோழர் சுப்பையா அவர்களின் 'தமிழகம்' மாளிகையில், இந்தியத் துணைக்கண்டத்தின் ஆட்சி மொழிப்பற்றிய முடிவு எடுக்க, கூடிய சர்வ கட்சிகளின் வட்டமேசை மாநாட்டில், ஆச்சாரியாரும், அண்ணாவும் கலந்துகொண்டார்கள். மாநாடு முடியும்வரையில் அண்ணா அவர்களை ஆச்சாரியார் அறிந்துகொள்ளவில்லை. யாரோ ஒருவர் என்ற முறையில்தான் அவருடன் உரையாடல் நிகழ்த்தினார்.

மாநாடு முடிந்து கலைந்து போகும்போது, நண்பர் ம. பொ. சிவஞானம் அவர்கள், அண்ணா அவர்களையும், இரா. நெடுஞ்செழியன் அவர்களையும் ஆச்சாரியார் அருகே அழைத்துச் சென்று அறிமுகம் செய்துவைக்க முயன்றார்.

"இவர்தான் அண்ணாதுரை" என்று தோழர் ம. பொ. சிவஞானம் அவர்கள் ஆச்சாரியாரிடம் கூறினார். அந்தச் சொற்றொடர் ஆச்சாரியார் காதில் அவ்வளவு சரியாகப் படவில்லை. "யாரு" என்று ஆச்சாரியார் கேட்டார். "இவர்தான் அண்ணாதுரை" என்று தோழர் ம. பொ. சிவஞானம் சற்று உரத்த குரலில் கூறினார். உடனே ஆச்சாரியார் பெருவியப்புற்று, மூக்கின் மேல் சுட்டுவிரலை வைத்துக்கொண்டு, "இவரா? இவரா அண்ணாதுரை?" என்று வியப்புணர்வு தோன்றக் கேட்டார். பக்கத்திலிருந்தவர்கள் "ஆமாம்! ஆமாம்!" என்று கூறினர். மீண்டும் ஆச்சாரியார் "இவரா? அண்ணாதுரையா? அண்ணாதுரை என்றால், ஒரு பிரம்மாண்டமான, ஒரு பயங்கரமான மனிதராக இருப்பார் என்றுதான் இதுவரையில் நான் எண்ணிக் கொண்டிருந்தேன்!" என்றார்.

பிறகு தோழர் ம. பொ. சிவஞானம் அவர்கள் நெடுஞ்செழியனைச் சுட்டிக் காட்டி, "இவர்தான் நெடுஞ்செழியன்!" என்றார். ஆச்சாரியார் நிமிர்ந்து பார்த்துவிட்டு, "இவர் நெடுஞ்செழியன், சரி! இவர் அண்ணாதுரை என்கிறீர்களே!" என்று அண்ணாவைச் சுட்டிக் காட்டி வியப்போடு சிரித்துக்கொண்டு கேட்டார்.

பக்கத்திலிருந்த ஒருவர், "இவரைப் படத்தில் பார்ப்பதற்கும் நேரில் பார்ப்பதற்கும் எவ்வளவோ வித்தியாசம் இருக்கிறது" என்றார். ஆச்சாரியார், "நான் படத்தில் கூட இவரைப் பார்த்ததில்லை. காதால்தான் இவரைப் பற்றி ரொம்ப ரொம்பக் கேட்டிருக்கிறேன்! சுப்பையா பிள்ளை போன்றவர்கள் அடிக்கடி இப்படிக் கூட்டங்கள் கூட்டினால்தானே ஒருவரையொருவர் தெரிந்துகொள்வதற்காவது வாய்ப்பு ஏற்படுகிறது!" என்றார்.

அறிஞர் அண்ணா அவர்கள் இறுதி வரையில் புன்சிரிப்பு சிரித்துக்கொண்டே ஆச்சாரியார் முன்னிலையில் நின்றார்கள்.

இறுதியாக அண்ணா அவர்கள் "பிறகு பார்க்கிறோம்; போய் வருகிறோம்!" என்று ஆச்சாரியாரிடம் விடைபெற்றுக்கொண்டு கிளம்பினார்கள்.

மன்றம்

இரா. நெடுஞ்செழியன், எம்.ஏ.

15 - 2 - 56 புதன்கிழமை

அந்த நாள்

1956 பிப்ரவரி 20-ஆம் நாள் ! தமிழகத்தின் வரலாற்றில், பொன்னெழுத்துக்களால் பொறிக்கப்படப் போகும் போற்றுவதற்குரிய நாள் ஆகும்! அந்த நாளில்தான், தமிழர்களின் ஒருமித்த உரிமை வேட்கை, உலகுக்கு எடுத்து உணர்த்தப்படப் போகிறது!

1. **தட்சிணப் பிரதேசம் அமைப்பது என்ற கருத்தும் முயற்சியும் அறவே அகற்றப்பட வேண்டும்.**
2. **மொழிவழி அடிப்படையில் மாநிலங்கள் அமைக்கப் படவேண்டும்.**
3. **தமிழகத்தோடு சேர்க்கப்படாமலிருக்கும் தேவி குளம்—பீர்மேடு — நெய்யாற்றங்கரை—கொச்சிச் சித்தூர்—பாலக்காடு ஆகிய தாலுக்காக்களிலுள்ள தமிழ்ப் பகுதிகளும், வடக்கே சித்தூர் மாவட்டத்திலுள்ள தமிழ்ப் பகுதிகளும் புதிய தமிழ் மாநிலத்தோடு இணைக்கப்பட வேண்டும்.**
4. **சென்னை மாநிலத்திற்குத் 'தமிழ் நாடு' என்று பெயரிடப்பட வேண்டும்.**

இந்தக் கோரிக்கைகளின் அடிப்படையில், தமிழகத்திலுள்ள தமிழர்கள் அனைவரையும் ஒன்று திரட்டி, இந்தக் கோரிக்கைகளை உலகுக்கும், இந்தியப் பேரரசினருக்கும், சென்னை அரசினருக்கும் உணர்த்த வேண்டி **சர்வக் கட்சி கூட்டணியினர் பிப். 20-ஆம் நாளைப் பொது வேலை நிறுத்த** நாளாகத் தேர்ந்தெடுத்துள்ளனர்.

பிப். 20 ஆம் நாளன்று தமிழகத்தில் வேலைகள் செய்வோரும் செய்விப்போரும், தொழில்கள் புரிவோரும் புரிவிப்போரும், கடைகள் நடத்துவோரும் நடத்துவிப்போரும், படிப்பு படிப்போரும் படிப்புவிப்போரும் போன்ற இன்ன பிற வேலைகளில் ஈடுபட்டுள்ளவர்கள் தங்கள் தங்கள் வேலையைச் செய்யாமல் பொது **வேலை நிறுத்தத்தை** மேற்கொண்டால், **கோரிக்கை**களுக்கு இருக்கும் ஆதரவையும், ஆற்றலையும், இரு அரசினரும் உணருவார்கள்; ஏற்படும் உணர்வு, உடனடியாக நீதி வழங்கத், தூண்டுகோலாக அமையும் என்று கருதித்தான், **சர்வ** கட்சிக் கூட்டணியினர் பொதுவேலை நிறுத்தத்தை மேற்கொள்ளும்படி தமிழகத்திலுள்ள எல்லோரையும் கேட்டுக் கொண்டுள்ளனர்.

சர்வகட்சிக் கூட்டணியின் முயற்சி என்றால், அது தமிழகத்தின் முயற்சி என்றுதான் சொல்ல வேண்டும். தமிழர்கள் எல்லோருடைய ஆதரவையும் பெற்ற பெரும்பான்மையோரின் பிரதிநிதித்துவம் வாய்ந்த ஒரு கூட்டணி இதற்கு முன்னால் உருவாகவே இல்லை என்றுதான் சொல்ல வேண்டும்.

நீதிக் கட்சி

தமிழரசுக் கழகம்

கம்யூனிசுட்டு கட்சி

சோசியலிசுட்டுக் கட்சி

பிரசா-சோசியலிசுட்டுக் கட்சி

வடக்கு எல்லைப் பாதுகாப்புக் கமிட்டி

திரு-கொச்சித் தமிழ்ப் பகுதிகள் இணைப்புக் [கமிட்டி

தாழ்த்தப்பட்டோர் சம்மேளனம்

திராவிடப் பார்லிமெண்டுக் கட்சி

தமிழர் பேரவை

புதுவை மக்கள் முன்னணி

திராவிட முன்னேற்றக் கழகம்

போன்ற பல்வேறு அரசியல் தொடர்புள்ள அமைப்புகளும், அரசியல் கட்சிகளின் ஆதரவு பெற்றுள்ள பிற அமைப்புகளும், அரசியல் கட்சிகளோடு தொடர்பு கொள்ளாமல், ஆங்காங்குப் பொதுப்படையாக விளங்கும் மக்கட் சக்திகளைக் கொண்ட

தொழிலாளர் சங்கங்கள்

வர்த்தகர்கள் சங்கங்கள்

குமாசுத்தாக்கள் சங்கங்கள்

தமிழ்க் கழகங்கள்

தமிழ்ப் படிப்பகங்கள்

நாடக அரங்கங்கள்

நடிகர் சங்கங்கள்

எழுத்தாளர் சங்கங்கள்

பத்திரிகையாளர்கள் சங்கங்கள்

நிறுவனங்களின் சங்கங்கள்

ஊராட்சி மன்றங்கள்

நகராட்சி மன்றங்கள்

மாவட்டவாட்சி மன்றங்கள்

போன்ற அமைப்புகளும் மேற்கூறப்பட்ட கோரிக்கைகளை ஆதரித்துப், பிப். 20 பொது வேலை நிறுத்தத்தை வெற்றிகரமாக்க முயற்சி எடுக்கும் என்று எதிர்பார்க்கப்படுகின்றது.

சில அமைப்புகள் பொதுவேலை, நிறுத்தத்தைத் தூண்டும் அமைப்புகளாக இயங்க இயலாத நிலையில், பொதுவேலைநிறுத்தத்தை ஏற்று ஒத்துழைப்பைத் தரும் நிலையில் இருக்கும் என்று எதிர்பார்க்கப்படுகின்றன. அந்த வகையில்தான் 'திராவிடக் கழகம்' தன் பணியை ஆற்ற முன் வந்துள்ளது. 5-2-56-இல் திருச்சி தேவர் மண்டபத்தில் திராவிடக்கழக மாணவர் மாநாட்டில், பெரியார் ஈ. வே. ரா. பேசுகையில், "இஷ்டப்பட்டால் (திராவிடர்) கழக மெம்பர்கள் பிப். 20-ந் தேதி சர்வகட்சி ஹர்தாலில் கலந்துகொள்ளலாம்" என்று குறிப்பிட்டுள்ளார்கள். திராவிடக் கழகமும் சர்வகட்சிக் கூட்டணியில் இணைந்து நின்று, பொதுவேலைநிறுத்தத்தைத் தூண்டிடும் ஒரு அமைப்பாக விளங்கியிருந்திருக்குமேயானால், அது போற்றுவதற்குரிய ஒன்றாக அமைந்திருக்கும். திராவிடக் கழகத் தோழர்கள் பொதுவேலைநிறுத்தத்தைத்தூண்டிடும் பணியினைச் செய்ய முன்வரா விட்டாலும், தாமும் பொதுவேலைநிறுத்தத்தை மேற்கொள்ளும் வகையில் ஒத்துழைப்பு தரவேண்டிக் கேட்டுக்கொள்கிறோம். அதற்குப் பெரியாரின் அனுமதி முழுக்க முழுக்க உண்டு என்பதை மேற்கண்ட கூற்றிலிருந்து அறிந்து கொள்ளலாம்.

அது போலவே காங்கிரசுக்காரர்களும் பொதுவேலைநிறுத்தத்திற்கு முழு ஆதரவு தருவார்கள் என்று எதிர்பார்க்கிறோம். மேற்குறிக்கப்பட்டுள்ள கோரிக்கைகள் தமிழகக் காங்கிரசுக்காரர்களுக்கு மாறுபாடானவைகளாக ஒருகாலும் இருக்க முடியாது. அவை அவ்வளவும் அவர்களால் பல காலமாக வற்புறுத்தப்பட்டு வந்த கொள்கைகள்தாம். தமிழகத்திலுள்ள தன்னலங் கருதாத பொதுநல நோக்கமுடைய காங்கிரசுக்காரர்கள் ஒவ்வொருவருடைய இதயத்திலும் கையை வைத்துப் பார்த்தால், அவ்வளவு பேர்களுடைய இதயங்களும் மேற்கண்ட கோரிக்கைகளை முழுக்க முழுக்க ஏற்றுக்கொள்ளும் என்பது திண்ணம். அத்தகைய காங்கிரசுக்காரர்கள், காங்கிரசு மேலிடத்தின் கட்டுப்பாட்டின் காரணமாகப், பொதுவேலைநிறுத்தத்தை நேரிடையாகத் தூண்டும் பணியைச் சர்வகட்சிக் கூட்டணியில் இணைந்து நின்று செய்ய இயலாவிட்டாலும், தனியாக நின்று செய்ய முற்படலாம்; அப்படியும் நின்று தூண்டும் பணியினைச் செய்ய முடியாதவர்கள், வேலை நிறுத்தம் செய்து, பொதுவேலைநிறுத்தத்தை வெற்றிகரமாக்க, அந்த வகையிலாவது ஒத்துழைக்குமாறு வேண்டிக் கேட்டுக்கொள்ளுகிறோம்.

திராவிடக் கழகத்தாரும், காங்கிரசுக்காரரும் தங்கள் வேலைகளை நிறுத்தம் செய்து, பொது வேலை நிறுத்தத்திற்கு ஆதரவு தரும்போது, தமிழகத்திலுள்ள எல்லாக் கட்சியினரும் பொதுவேலைநிறுத்தத்தை மேற்கொண்டனர் என்ற பெருமை தமிழகத்துக்கு வந்து சேரும்.

பொதுவேலைநிறுத்தம் என்பது, மேற்கண்ட கோரிக்கைகளை வற்புறுத்த, பொதுமக்கள் எல்லோராலும் எடுக்கப்படும் முதல் நடவடிக்கையாகும். இந்த நடவடிக்கை, தமிழகத்தைச் சார்ந்த ஆடவர்—பெண்டிர்—சிறுவர் ஆகிய எல்லோரும் கலந்து கொள்ளக் கூடிய எளிமையான—ஆனால் வலிமையுள்ள நடவடிக்கையாகும். அடுத்து அடுத்துத் தேவைப்படும் தீவிரமான நடவடிக்கைகளைத் தீவிரமான கட்சிகள் மேற்கொள்ளும். எனவேதான் பொதுமக்கள் எல்லோராலும் கடைபிடிக்கக் கூடிய பொதுவேலை நிறுத்தம் முதல் நடவடிக்கையாக மேற்கொள்ளபபட்டிருக்கிறது.

அரசியலாரின் அநீதியான செயலைக் கண்டிக்க, பொதுவேலைநிறுத்தம், சிறந்ததொரு கருவி ஆகும் எனபதை காந்தியாரே 1919 ஆம் ஆண்டு 'யங் இந்தியாவில்' குறிப்பிட்டுள்ளார். "'ஹர்த்தாலே' (பொதுவேலைநிறுத்தம்) சரியான முறையாகும். தேசீய எண்ணத்தைத் தெரிவிக்க, மாபெரும் பொதுக்கூட்டங்களை விடச் சக்தி வாய்ந்த மார்க்கம் இது," என்பது காந்தியாரின் கருத்துரையாகும். இந்தக் கருத்துரை மற்றவர்களைக் காட்டிலும் காங்கிரசுக்காரர்களுக்கு நல்ல தெளிவு பயக்கும் என்று கருதுகிறோம்

முதலில் தமிழகத்தை மொழிவழி மாநிலமாகப் பிரிக்காதது அரசியலாரின் தவறாகும்; இரண்டாவது, அதனைத் 'தமிழ்நாடு' என்று குறிக்காதது பெருந் தவறாகும்; மூன்றாவது தமிழகப் பகுதிகளைப் பிற மொழி மாநிலங்களில்

கொண்டு போய்ச் சேர்த்திருப்பது மாபெருந் தவறுகும்; நான்காவது அதனைத் தட்சிணப் பிரதேசம் என்ற அமைப்புக்குள் அடக்க முயலுவது என்பது மிக்க மாபெருந் தவறுகும். இத்தகைய தவறுகளெல்லாம் துடைக்கப்படும் காலம் வரையில், தமிழர்கள் ஓயமாட்டார்கள்—உட்காரமாட்டார்கள் என்பதை உலகறியக் காண்பிக்க வேண்டிய கட்டம் இப்பொழுது ஏற்பட்டுள்ளது.

தட்சிணப் பிரதேச அமைப்பு என்பது மொழிவழி உரிமைகளுக்கு உலை வைப்பது — தமிழ் மாநில வளர்ச்சியை தடைப்படுத்துவது மொழிச் சண்டைகளைப் பெருக்குவது—தகுதி திறமைத் தகராறுகளை வளர்ப்பது — இந்தி மொழி ஆதிக்கத்திற்கு இடமளிப்பது—இந்தியப் பேரரசால் மேலும் புறக்கணிக்கப்படுவதற்கு வசதி செய்வது — பல ஆண்டுகளாகக் காங்கிரசு வற்புறுத்தி வந்த கொள்கைக்கு மாறுனது—மக்களின் விருப்பத்துக்கு எதிரானது—சர்வ கட்சிகளின் கருத்துக்கு முரணானது—சர்வாதிகார முறையில் புகுத்தப்படுவது—சனநாயகப் பண்பிற்கு மாறுனது—பிற்போக்கானது—எவ்வித பலனையும் உருவாக்காதது! இத்தகைய காரணங்களால், தட்சிணப் பிரதேச அமைப்பு முழு மூச்சோடு எதிர்க்கப்பட்டு, வேரோடும் வேரடி மண்ணோடும் பெயர்த் தெறியப்படவேண்டியதாகும்.

எங்கள் வாழ்வும் எங்கள் வளமும்
மங்காத தமிழென்று சங்கே முழங்கு!
எங்கள் பகைவர் எங்கோ மறைந்தார்
இங்குள்ள தமிழர்கள் ஒன்ருதல் கண்டே!

என்று புரட்சிக்கவிஞர் பாடியதற்கிணங்க இங்குள்ள தமிழர்கள் ஒன்றுபட்டுப் பிப். 20 பொதுவேலை நிறுத்தத்தை வெற்றிகரமாகவும், சிறப்பாகவும் நடத்தித் தீரவேண்டியவர்களாக இருக்கிருர்கள்.

தமிழகத்திலுள்ள தொழிலாளர்களும், தொழிலதிபர்களும், ஆசிரியர்களும், மாணவர்களும், உழைப்பாளிகளும், உழவர்களும், வணிகம்புரிவோரும், வண்டிகள் ஓட்டுவோரும், பற்பல வேலை செய்வோரும், பத்திரிகை யடிப்போரும், படங்கள் காட்டுவோரும், உணவு விடுதி நடத்துவோரும், உல்லாச வேடிக்கை காட்டுவோரும், நாடக அரங்குகள் நடத்துவோரும், பாட்டுக் கச்சேரி வைப்போரும், அலுவல்கள் நடத்துவோரும், அலுவல்கள் செய்வோரும், நிறுவனங்கள் வைத்திருப்போரும், நிலையங்கள் நடத்துவோரும் தத்தம் வேலைகளைப் பிப். 20ஆம் நாள் செய்யாமல் நிறுத்தி விடுவதன் மூலம், துக்கத்தையும் துயரத்தையும், அரசியலார்க்கு அறிவிக்க வேண்டுகிறோம். கோரிக்கைகளை வற்புறுத்தும் அறிகுறியாகவும், அவை நிறைவேருமல் போனதால் ஏற்பட்ட துக்கம் — துயரம் ஆகியவற்றின் அறிகுறியாகவும் பிப். 20 பொதுவேலைநிறுத்தம் விளங்கட்டும்!

அமைதி கெடாமல்
பலாத்காரம் தலைகாட்டாமல்
சேதம் விளையாமல்
துன்புறுத்தல் நிகழாமல்
பிப். 20 பொதுவேலைநிறுத்தம் நடைபெறுமாக!
தமிழகம் தனி மாநிலம் ஆகட்டும்!
திராவிடம் தனிக் கூட்டாட்சி நாடாக மலரட்டும்!

1956 பிப்ரவரி 20-ல்

பொது வேலை நிறுத்தம்

தன்மானங் குன்ருத் தமிழர்களே!
தமிழர் உரிமையைத் தமிழர் பெற,
அதனை அரசியலார்க்கு அறிவுறுத்த,
தமிழகம் எங்கணும் மேற்கொள்வீர்!
சர்வ கட்சிக் கூட்டணியில் அணிவகுத்து நிற்பீர்!

★

25—1—56 அன்று தோழர்
எஸ். எஸ். பி. லிங்கம் (வேதாசலம்)
தம் மக்கள் இருவர்க்கு எழுத்தறி
விக்கும் விழா நடத்தியபோது:
தோழர் எஸ். எஸ். பி. லிங்கம் அவர்களும்
அவருடைய மூத்த மகளார்
மணிமேகலையும்

★

★

அறிஞர் அண்ணு அவர்களும்,
தோழர் எஸ். எஸ். பி. லிங்கம் அவர்களின்
இளைய மகளார்
அழகுராணியும்

★

அண்டசராசரம்

பாரி

(37)

பிரமதேவன் ஐந்து தலைகளுடன், பத்துக் கண்களுடன் உற்றுப் பார்த்துக்கொண்டிருந்தார், ஒரு பெண்ணின் அழகைக் காம இச்சையுடன் பருகிக்கொண்டிருந்தார். சாதாரண மனிதர் தனது இரண்டு கண்களால் சற்று முறைத்துப் பார்த்தாலே எந்தப் பெண்ணும் கூச்சத்துடன் ஒதுங்கிச் செல்வாள். ஆனால் பிரமதேவனின் கண்கள் எப்பொழுதும் விழித்தபடி இருப்பவை, அதிலும் எல்லாத் திக்குகளும் பார்க்க திசைக்கொரு முகமாக அமைந்துக் கண்கள் வட்டமிட்டன. அந்தக் கண்களின் காமத்துக்கு இலக்கான பெண்—அதிலும் அவருடைய மகள் என்ன செய்வாள். தந்தையின் காமப்பார்வை கண்டு சகிக்காமல் மேலே பறந்து சென்றாள்.

அண்டங்களையெல்லாம் உண்டாக்கியவர் பிரமதேவர், அவருடைய மனதில் உண்டாகிய காமம் எல்லாவற்றையும் விடப் பெரிதாக, மோசமானதாக இருந்தது. பார்வையில் வந்தவள் தன் மகள் என்பதையும் பாராமல், "அவள் ஒரு பருவ மங்கை" என்பதைமட்டும் எண்ணி, காமப்பலி கொள்ள துடித்தது. தந்தையின் முன்னின்று மகள் ஓடியதும், அப்பொழுதாவது தந்தைக்கு உணர்வு—புத்தி வந்ததா? "ஆகா எப்படிப்பட்ட மாபாதகத்தைச் செய்ய விருந்தோம்! மகளை மருவ நினைத்தோமே!" என்று பிரமா உள்ளந் திருந்தினாரோ? கசடனாயிருந்தாலும், கடைசி நேரங்களில் சில சமயம் மனம் மாறி தீச்செயலை மறப்பதுண்டு. பிரமா தேவதேவனாயிற்றே! நினைத்ததை முடிக்கவேண்டுமென்றே நின்றார்! தந்தையின் கட்டளைக்கு மகள் பணியவில்லையே என்று அவர் கோபித்தார். தந்தையின் கட்டளை என்ன? மகள் தந்தையை மனதார, மனைவியைப்போலத் தழுவிக்கொள்ள வேண்டுமென்பதாகும்.

சரசுவதி தப்பி ஓடியதும் பிரமா கோபத்துடன், பத்துக் கண்களில் பொறி பறக்க எழுந்தார், மகளைத்தேடி புறப்பட்டார். நான்கு திக்குகளிலும் ஆகாயத்திலும் ஒரே சமயத்தில் பார்த்திட முகங்கள் இருக்கும்பொழுது தேடியதைக் கண்டுபிடிக்க எவ்வளவு நேரம் பிடிக்கும்! ஒரு காட்டில், செடிகொடிகளின் மறைவில் சரசுவதி மறைந்து நின்றாள். பலசாலியான தந்தை அவள் கையைப் பிடித்து, வெளியே இழுத்தார். உடல் நடுங்க, உள்ளம் பதற அவள் நின்றாள்.

கேலிச் சிரிப்பு—வெற்றிச் சிரிப்பு—காமச் சிரிப்பு பிரமாவிடமிருந்து வந்தது. "வா, கண்ணே! நம்மிடத்திற்குப் போகலாம்!"

"வேண்டாம்! நான் எங்கேயாவது ஓடிவிடுகிறேன்!" மகள் அழுதாள்.

"அசட்டுப்பெண்ணே! ஏன் அழுகிறாய்? இப்பொழுது வேண்டாமென்றுதான் சொல்வாய். ஒருதடவை அனுபவித்துவிட்டால், அப்புறம்..."

"ஐயோ! அப்பா!" மகள் கதறினாள், தந்தையின் காலைப் பிடித்துக்கொண்டு.

"அப்பா என்று மறுபடியும் சொல்லாதே! அது நன்றாகயில்லை. இனி உனக்கு நான் அப்பாவுமல்ல, நீ என்னுடைய மகளுமல்ல! அழகு மங்கையே! நீ எனக்குச் சமமானவள், என்னுடைய சதியாக உன்னை நான் ஏற்றுக் கொள்ளுகிறேன்!"

"யார் செய்த சதியோ? யாரிட்ட சாபமோ? இந்த அநியாய வார்த்தைகளை நான் கேட்கவேண்டியிருக்கிறது. நானென்ன பாவம் செய்தேன், இந்தக் கொடுமைக்கு ஆளாக?" பெண் புலம்பினாள்.

" ஒரு பாவமும் நீ செய்யவில்லை! பருவமும் அழகும் வீணாக இவ்வளவு நாட்களும் பாராமல் விட்டிருந்த நான்தான் பாவம் செய்தவன்! பச்சிளம்பாவாய்! என் இச்சைக்கிளியே! அருகில் வா! என்னைப் புண்ணியவானாக்கு! எங்கே ஓடப் பார்க்கிறாய்! நீமட்டும் கூடாது, நாமிருவரும் கைகோர்த்து ஓடலாம் இன்பபுரி நோக்கி! வா! உன் மலரடி நோகும்! உன்னை என் கரங்களில் ஏந்திச் செல்கிறேன்! ஏந்திழையே! ஏன் கோபத்துடன் பார்க்கிறாய்? கோபத்தால் சிவந்த உன் முகம் இன்னும் அதிக அழகுடன், என் கருத்தை அள்ளிடும் பொலிவுடன் விளங்குகிறது! மாளிகை போகவேண்டாம், இங்குகூட யாரும் இல்லை! என்னருகே சற்றுவா!!!

" அப்பா!" மகள் கோபத்துடன் கூவினாள். "மறுபடியும், மறுபடியும் அப்படி சொல்லாதே! அன்பே, இன்பமே, கண்ணே, கண்ணாளா என்று வேறெப்படியாவது கூப்பிடு! தவறுதலாகக் கூப்பிடும் அந்த உதடுகளை—செவ்விதழ்களை தண்டிக்கவேண்டும்! இதோ! தண்டனை"

மகள் முகத்தைத் திருப்பி, பலங்கொண்ட மட்டும் உதறித்தள்ளி எட்டி நின்றாள். எதிரே நிற்பது இனி தந்தையல்ல, காமுகன், கசடன், மகளென்றும் பாராது மருவ நினைக்கும் பித்தன், காமவெறியன், சரசுவதியின் கண்களில் கோபக்கனல் பறந்தது. "சீ! காமுகனே! என் முன் நில்லாதே! மகளென்றும் பாராது மோக வார்த்தைகளைச் சொல்லும் நீ அழிந்துபோ! உன் தலை அறுந்துபோக!"

பிரமா சிரித்தார். "மோகனாங்கி உன் கோபம் என் தாபத்தைத்தான் அதிகப்படுத்துகிறது. என் தலை அறுந்துபோனாலும்கூட பாதகமில்லை. உன்னை மட்டும் என் தாரமாக்காமல் நான் விடப்போவதில்லை." பிரமா பின்பற்றி ஓடினார். சரசுவதி ஓடினாள். மகள் ஓடினாள் தந்தையிடமிருந்து தன்னைக் காப்பாற்றிக்கொள்ள, தன் மானத்தைக் காப்பாற்ற.

சரசுவதியால் எவ்வளவுதூரம் ஓட முடியும். கல்லில் முள்ளில் பட்டு கால்கள் நோவெடுத்தன. பின்னால் எலியை ஓடவிட்டு வேடிக்கையாக ஓடிவரும் பூனையைப்போல பிரமா வேகமாக வந்தார். மோக வார்த்தைகளை வீசியபடி! சரிந்த கூந்தலைப் பற்றி யிழுத்தார். மறுசமயம் நழுவிவிழும் உடையைப் பற்றிக்கொண்டார். மகளின் உடை தந்தையின் கையில்! இனிமேலும் ஓடினால், ஆடையின்றி அவள் ஓடவேண்டும்! அந்தக் காட்சியைக் கண்டுகளிக்க தந்தை —உலகத்தில் அன்றிலிருந்து இன்றுவரை பிரமாவைத்தவிர வேறெவரும் அந்த நிலையில் இருந்திருக்க முடியாது—தயாராக யிருந்தார்! மங்கை நல்லாள் திகைத்தாள், கண்ணீருகுத்தாள், மாதேவன் சிரித்தார், " அருகே வா! இனியேனும் தடை கூறாதே!" என்று ஆடையைப்பற்றி அணங்கை இழுத்தார். என்ன செய்வது? காட்டில், காமுகன் கையில் பாதி ஆடையுடன்!

அந்த நேரத்தில் ஒரு புள்ளிமான் துள்ளிக்கொண்டு அந்த வழி ஓடியது! ஒரு தாவுதல், பத்தடி பதினைந்தடி தூரத்துக்கப்பால் மான் காணப்பட்டது! மறுதாவுதல், மான் ஆச்சரியப்படத்தக்க வேகத்தில் போய்க்கொண்டிருந்தது. மான் போகும் வேகத்தில் தானும் போக முடிந்தால்—சரசுவதிக்கு ஒரு யோசனை தோன்றியது. மானாக உருமாறித் தப்பி ஓடிவிட்டால் என்ன?

பிரமதேவன் ஆச்சரியமடைந்தார். அவர் கையில் ஆடை முழுவதும் வந்துவிட்டது. ஆனால் பெண்? அவளைக் காணோம். சற்று தூரத்தில் ஒரு பெண்மான் வேகமாக ஓடிக்கொண்டிருந்தது. பிரமா புன்முறுவல் செய்தார். அண்டங்களையெல்லாம் படைத்து, அதில் உயிர்களையெல்லாம் உண்டாக்கி, வேகமாக ஓடும் மானையும் படைத்த அவருக்கா பெண் மறைந்த மாயம் தெரியாமற் போகும்? மானாக உருமாறி, அந்தப்பெண் ஓடுகிறாள் என்பதை அவர் அறிந்துகொண்டார். பெண்களில் அவள்—சரசுவதி எப்படிச் சிறந்தவளாக இருந்தாளோ, அப்படியே மான்களில் சிறந்ததாக, அழகாக, கருத்தைக் கவருவதாக அவள் உருமாறிய மானும் இருந்தது. ஒருவகையில் பிரமா பூரிப்படைந்தார். "மானே! தேனே!" என்று அவளை அவர் கூப்பிட்டிருக்கிறார். அவள் இப்பொழுது உண்மையில் மானாக மாறித் துள்ளிச் செல்கிறாள், உள்ளத்தை அள்ளிச் செல்கிறாள், மானே! தேனே" என்று சொன்னதில், மான் அவர் முன் ஓடுகிறது. இனி தேன்—காமத்தேனை சுவை பார்ப்பதுதான் பாக்கி! அவள் மானாக மாறியதும், வெகு தூரத்துக்கு ஓடிவிட்டாள். "இருந்தால் என்ன? ஓடி விளையாடி கடைசியாக பிடித்து விடுவதிலும் தனியின்பம் இருக்கத்தான் செய்கிறது, இதோ!" என்று பிரமதேவன் தன்னை ஒரு மானாக மாற்றிக் கொண்டார்.

பெண் மான் திரும்பிப் பார்த்தது. பிரமாவை—மகளை மருவ நினைத்த மாபாதகனைக் காணோம்! பெரு மூச்சு விட்டு மான் நின்றது! ஆனால் மறுகணம். ஒரு ஆண் மான் தன்னை

நோக்கி வருவதை அது கண்டது. மறுபடியும் ஓட்டம்! பெண் மான் ஓடியது, ஆண் மான் பின்னல் துரத்தி வந்தது! மகள் ஓடினுள், பிதா பிரமா துரத்தி வந்தார்!

இரண்டு மான்களுக்கும் உள்ள தூரம் குறைய ஆரம்பித்தது. ஆண்மான் பெண் மானை நெருங்கிவிட்டது. பெண் மான் தோற்று விட்டது. மானுருவில் பிரமா காமவெறியுடன் கலங்கி நிற்கும் மானை நெருங்கினுர். இன்னும் சிறிது நேரத்திற்குள் மகளின் மானத்தை தந்தை வாங்கியிருப்பார்.

இந்த நிலையில் வேடன் ஒருவன் வில்லுடன், குறி வைக்கப்பட்ட அம்புடன் தோன்றினுன். வேடன் சாதாரண வேடனல்ல, சிறுவேடன்—சிவ பெருமான் வேடனுக வந்தவர். மான் கூக்குரல் கேட்டு மட்டும் வரவில்லை. தேவர்கள் கூட சிவபெருமானிடம் சென்று முறையிட்டுக் கொண்டார்கள். பிரமாவின் செய்கை அவர்களுக்கேப் பிடிக்கவில்லை. ஏதோ சிறு தவறுகள், விளையாட்டுகள், வேடிக்கைகள் இவைகளை தேவர்கள் அனுமதிப்பார்கள், அன்ருட அவசியம் என்றுகூட எடுத்துக் கொள்ளுவார்கள். ஆனுல் பிரமா செய்ய நினைத்தது, மகளை தன் மனைவியாக்க முயன்றது தேவர்களுக்குப் பிடிக்கவில்லை. ஆனுல், அண்டங்களின் நாயகனைக் கண்டித்திடும் ஆற்றல் அவர்களுக்குக் கிடையாது. எனவே அவர்கள் மேலிடமான சிவபெருமானிடம் முறையிட, பிரமா ஒரு குற்றம் செய்கிருரென்றதும் சிவனுக்குக் கோபம் வந்தது. ஞானக் கண்ணுல் பார்த்தார்! காட்டுப் பாதை, பெண் மானை ஆண் மான் துரத்திச் செல்லும் காட்சி! ஒரு கணம் சிவபெருமான் ரசனையுடன் கவனித்தார், ஆகா! ஆனுல் மறுகணம் பிரமனைத் தண்டிக்க வேண்டும் என்று தோன்றியது. வேடனுக மாறி, காட்டுக்குச் சென்ருர்.

பெண் மானைத் தழுவிட, ஆண் மான் சென்றது. அந்தக் கணம் வேடனின் வில் நிமிர்ந்தது, அம்பு பாய்ந்தது ஆண்மான் கீழே விழுந்தது, துடித்தது, புரண்டது, மூச்சு அடங்கி விட்டது, இறந்தது. மானுருவில் இருந்த பிரமா இறந்தார். அந்த சமயம் ஒரு ஒளி மான் உடலிலிருந்து பிரிந்து ஆகாயத்தில் சென்றதாம். அது அங்கு ஆதிரை நட்சத்திரமானதாம்.

பிரமா இறந்தார், சரசுவதி சுய உருவத்துடன் நின்ருள். தானுடாவிட்டாலும், தன் சதை ஆடும் என்பதைப் போல், தந்தை இறந்து கிடப்பதைப் பார்த்ததும் அவள் அழுது புலம்பினுள். கடைசி நேரத்தில் காமுகனுக மாறிவிட்ட போதிலும், சிறு வயதில் அன்புடனும் ஆதரவுடனும் வளர்த்தவர் அவர்தானே! உறவின் பாசம், அவர் செய்ய விருந்த பாதகத்தை மறந்துவிடச் செய்தது.

சரசுவதி புலம்புவதைப் பார்த்து, சிவபெருமான் சிரித்தார். "பெண்ணே! உன்னைப் பாதுகாக்கவே அவனை நான் தொலைத்தேன்!"

வேடனுக வந்தது சிவபெருமான என்பதை உணர்ந்தாள். "பெருமானே! இவருக்கு மீண்டும் உயிர் தாருங்கள்!"

"உயிர் தந்தால் மீண்டும் நீ வருத்தப்பட மாட்டயே!"

"இல்லை, உயிருடன் வந்தால் போதும்!"

"பின் நான் சொல்லுகிறபடி நீ நடப்பாயா?"

"உங்கள் வார்த்தையை மீறமாட்டேன்." சிவபெருமானை வணங்கியவண்ணம் சரசுவதி சொன்னுள்.

"அப்படியானுல் இதோ!" என்று சிவன் கையை உயர்த்தினுர். செத்துக் கிடந்த மான் துள்ளியது, அந்த இடத்தில் கண்களைத் துடைத்துக்கொண்டு பிரமதேவன் நின்ருர்.

பிரமதேவனும் சரசுவதியும் சிவபெருமானை தலை குனிந்து வணங்கினுர்கள். கையை உயர்த்தி "நீங்கள் இருவரும் கணவன் மனைவியாக வாழ்வீர்களாக!" என்று ஆசிர்வதித்து சிவன் மறைந்தார்!

கணவன்—மனைவியாக! சரசுவதி திடுக்கிட்டாள். பிரமா பேரானந்த மடைந்தார். கையுங் களவுமாகப் பிடிக்கப்பட்டு, திருட்டுக் குற்றம் சாட்டப்பட்டவன் குற்றவாளிக் கூண்டில் நிறுத்தப்பட்டு, தண்டனை எதிர்பார்க்கும் நேரத்தில், நீதிபதி "ஏ! திருடனே! உன்னை விடுதலை செய்கிறேன், திருடிய பொருளையும் நீ எடுத்துச் செல்லலாம்!" என்று உத்தரவிட்டால் திருடனுக்கு எப்படியிருக்கும். அதைப் போலச் சிவபெருமானிடம் கடுந்தண்டனையை எதிர்பார்த்த பிரமதேவன், குற்றத்துக்கு தண்டனை தரப்படாதது மட்டுமல்ல, தகுந்த பரிசையும் பெற்றுத் திரும்பினுர். சிவ பெருமானின் கட்டளையை மீற முடியாத சரசுவதியும் தந்தையின் பின்—இல்லை நாயகனின் பின் சென்ருள். அப்பா என்று இவரை அழைத்து வந்தவள் இனிமேல் "அன்பே! இன்பமே! அருமை நாயகனே!" என்று சொல்ல வேண்டியதாயிருந்தது. தந்தை—கணவன், மகள்—மனைவி உறவு முறை சிக்கலடைந்தது.

மான் கோலத்தில் ஓடியவர் மணக்கோலத்தில் திரும்பினுர். மகளாகப் போனவள் மனைவியாகப் பக்கத்தில் இருந்தாள். தேவர்கள் திகைத்தார்கள், தந்தை மகளின் கணவன், மகள் தந்தையின் மனைவி! பிரம புத்திரர்கள் தேம்பினுர்கள். இதுவரை தங்கையாக இருந்தவள் தாய் பதவிக்கு வருகிருள்.

இனி மருமகன் தம்பியாவான், மருமகள் தங் கையாவாள்!

அண்டசராசரங்களை உண்டாக்கியவர், நீதி நியாயங்களைத் தந்தவர், உலகங்களுக்கெல்லாம் முதல்வராக இருப்பவர், சத்தியலோகத்துத் தலைவர் அவர் தன் மகளை மனைவியாக ஆக்கிக் கொண்டார். புராணங்கள் எழுதுகின்றன. உலகமும் படம் வைத்து அவர்களை வணங்குகிறது.

சரசுவதியிடம் பிரமா கொண்ட காதல் சாமான்யமானதல்ல, தெய்வீகமானது. மகள் என்றும் பாராமல் கொண்ட காதல் அல்லவா! காதலுக்காக உயிரையும் விட்டார். பின்பு சிவனருளால் காதல் (காமம்) கைகூடியது, மகள் மனைவியானாள். சரசுவதியை மனைவியாகப் பெற்றும் அவர் சாந்தியடையவில்லை. பல ஆண்டுகளாக காமப்பலி கொண்டும், அவர் உள்ளத்தில் முதலில் உண்டான காமப் பசி தீரவில்லை. ஒரு மனைவி—ஒரு சரஸ்வதி போதாதென்று அவருக்குத் தோன்றியது. அந்த அம்மையாருக்கும் தெரிந்திருக்க வேண்டும். உயிர்களை யெல்லாம், தான் மனதில் தோன்றும் வகையில் வேண்டிய உருவங்களை உண்டாக்க வல்லவர் பிரமதேவன்! எனவே தமது காம இச்சைக்கு ஒரு சரசுவதி பொதாதென்ற எண்ணம் உண்டானதும், சரசுவதியை நூறு பெண்களாக உரு மாற்றினார். முன்பு ஒரு சரசுவதி இருந்த இடத்தில், சிருட்டி கர்த்தாவின் அரிய திட்டத்தில், நூறு சரசுவதிகள் காத்திருந்தனர். பிரமாவிற்கு நூறு மனைவிகள் கிடைத்தனர். நூறு பெண்களை தம் விருப்பப்படி யெல்லாம் பிரமா ஆட்சி செய்தார். தம் ஆத்திரம் தீரும் வரை, ஆவல் அடங்கும் வரை, அவர்களை தம் வசம் வைத்திருந்தார். பிரமாவின் வல்லமையால், நூறு சரசுவதிகளும் கருவுற்றனர், குழந்தைகள் பிறந்தன.

குழந்தைகளுக்கு அப்பனும் பாட்டனும் ஒருவராக இருந்தார், தாயும் தமக்கையும் ஒருத்தியாக இருந்தாள். தந்தைக்கும், மகளுக்கும் தகாத முறையில் பிறந்த காரணத்தாலோ என்னவோ குழந்தைகளெல்லாம் அரக்கர்களாக இருந்தார்களாம். தாய் தந்தை இருவரும் தேவர்களாயிருக்க, குழந்தைகள் மட்டும் அரக்கர்களாகப் பிறந்ததெப்படி என்று தேவர்கள் கவலைப்பட்டார்கள், தாய்க்கும் வருத்தமுண்டானது. தாய் தந்தை இவர்களைப் போலல்லாமல் மூன்றுவது இருக்கும் ஒருவனைப் போலக் குழந்தைகள் பிறந்ததென்றால் உலகத்தில் பல கதைகள் கட்டிவிடுவார்கள். ஆனால் தேவலோகத்தில் அத்தகைய புகார்கள் வராது, அதிலும் சரசுவதியை — சர்சுவதிகளை பிரமா கண்ணினை காப்பது போல் காத்துவந்தார். எனவே அரக்கர்கள் எவரும் வந்து தவறுகள் செய்திருக்க முடியாது. குழந்தைகள் அரக்கரானதற்குக் காரணம் மற்றவர்களுக்குத் தெரியாமலிருந்ததைவிட தாய்க்கும் தெரியாமலிருந்தது. ஒன்றும் புரியாத சர்சுவதி, குழந்தைகளுக்குத் தந்தையான பிரமாவை அடுத்து "பிரபு! நமக்குப் பிறந்த பிள்ளைகள் அரக்கராக இருக்கிறார்களே! காரணம் என்னவோ?" என்று பணிவுடன் வினவினாள்.

பிரமாவுக்குக் காரணம் தெரியும். முதலில் சொல்ல அவருக்குக் கூச்சமாக இருந்தது. ஆனால் மனைவி கேட்கும்பொழுது எப்படி மறுக்க முடியும்? மெதுவாக அதை விளக்கினார். பகற்காலங்களில் காமயிச்சையில் இருவரும் ஈடுபட்டிருந்ததால் அந்தப் பிள்ளைகள் அரக்கர்களானார்கள்.

பிரமாவின் குமாரர்களான அரக்கர்கள் தேவலோகத்தில் புகுந்து தேவர்களைத் துன்புறுத்த ஆரம்பித்தார்கள். அவர்கள் வருகிறார்களென்றால் தேவர்கள் அஞ்சி நடுங்கினார்கள், தேவேந்திரன் ஓடியொளிந்தான். இந்திரலோகம் அல்லற்பட்டது. அந்த பிரம புத்திரர்களை எதிர்க்கும் ஆற்றலின்றி, தேவர்கள் துன்பப்பட்டனர். கடைசியாக இந்திராதி தேவர்கள் ஒன்றுகூடி பிரமாவினிடம் வந்து முறையிட்டார்கள்.

பிரமாவின் கண்களில் கோபம் ஒளிவிட்டது. அப்படியே அவருடைய கண்ணிலிருந்து ஒரு பிள்ளை பிறந்தது. கோபத்தில் பிறந்து வந்ததால் அவன் உக்கிரன் என்று அழைக்கப்பட்டான். பிரமன் அந்தப் பிள்ளையைப் பார்த்து "நீ போய் அவர்களை கொன்றுவா!" என்று அனுப்பினார்.

உக்கிரன் தன் பெயருக்கேற்ற உக்கிரத்துடன் புறப்பட்டுப் போய், தன் அண்ணன்மார் நூறுபேர்களுடன் போரிட்டான். போரின் கடைசியில், நூறு பேர்களையும் உக்கிரன் கொன்று, வெற்றியுடன் திரும்பி, தந்தையை வணங்கி "உங்கள் கட்டளைப்படி நூறு பேர்களையும் கொன்றுவிட்டேன்" என்றான். பிரமா முதலில் கொன்றுவிடும்படி கட்டளையிட்டபோதிலும், அவர்கள் இறந்துவிட்டார்களென்றதும் அவருக்கு மனவருத்தமுண்டாயிற்று. பிள்ளைகள் இறந்தார்கள் என்றதும் தந்தைக்கு சோகமுண்டாகுமல்லவா? "அவர்கள் இறந்தனரோ?" என்று வருத்தத்துடன் உற்றுப் பார்க்க உக்கிரனும் இறந்துவிட்டான்.

வினாவும் விளக்கமும்

வினா : இராவணன், நரகாசுரன் முதலியவர்கள் தமிழர்கள் என்று சொல்லுகின்றீர்கள், அவர்களைப் பற்றித் தமிழ்நாட்டு வரலாறு பேசுகிறதா? அசுரர் அரக்கர் என்ற சொற்கள் தமிழரைக் குறிக்கும் என்பதற்குக் கல்வெட்டு, இலக்கியம், இலக்கணம், நிகண்டு முதலிய பண்டைத் தமிழர் வரலாறு கூறும் நூல்களில் ஆதாரம் காட்ட முடியுமா?

[இது அருள்நெறித் திருக் கூட்டத்தாரின் ஒன்பதாவது வினுவாகும்.]

விளக்கம் : இராவணன் நரகாசுரன் முதலியவர்கள், தமிழர்களாகத்தான் இருந்திருக்க வேண்டும் என்பதைத் திராவிட இயக்கத்தார் யாரும் தாமாக இட்டுக்கட்டிச் சொல்லவில்லை. தமிழ் நாட்டின் வரலாற்றுக் குறிப்புகளைத் துளித் துளியாக இங்கொன்றும் அங்கொன்றுமாக ஆராய்ந்து வெளியிடும், வரலாற்றறிஞர்களின் ஆராய்ச்சிக் கருத்துக்களை அடிப்படையாகக் கொண்டுதான், திராவிட இயக்கத்தார், மேற்கண்ட முடிவுக்கு வரவேண்டியவர்களாக இருக்கிறார்கள்.

தமிழகத்தின் இறந்தகால வரலாற்று நிகழ்ச்சிகள் அனைத்தையும், ஒன்று விடாமல் தொகுத்து எழுதப்பட்ட தமிழ்நாட்டு வரலாறு என்று ஒன்று இருப்பது போலவும், அதில் 'இராவணன், நரகாசுரன் முதலியவர்கள் என்று சொல்லப்படாமல் இருப்பது போலவும், அதனைத் தாங்கள் நன்கு அறிந்து வைத்திருப்பதைப் போலவும் எண்ணிக் கொண்டு, அருள்நெறித் திருக் கூட்டத்தார் நம்மைப் பார்த்துக் கேட்கிறார்கள், "அவர்களைப் பற்றித் தமிழ்நாட்டு வரலாறு பேசுகிறதா?" என்று. அவர்களின் அறியாமையைக் கண்டு நாம் எள்ளி நகையாட வேண்டியவர்களாக இருக்கிறோம்.

தமிழ்நாட்டு வரலாற்றுக் குறிப்புகளும், நிகழ்ச்சிகளும் எவ்வளவோ மறைக்கப்பட்டும், மறைக்கப்பட்டும், மாற்றப்பட்டும் மங்கி மடிந்துள்ளன. தமிழ்நாட்டின் முற்றும் முடிந்த முறையான வரலாறு இன்னமும் எழுதப்படவில்லை என்றுதான் தமிழ்ப் பேரறிஞர்களும் தமிழக வரலாற்று ஆசிரியர்களும் ஓயாமல் எடுத்து மொழிந்து வருகின்றனர்! எவ்வளவோ உண்மைகள், சிறு சிறு அளவில் வெளிவரும் தமிழ்நாட்டு வரலாற்று நூல்களின் கண்களுக்குத் தெரியாமல் விடுபட்டுப் போயிருக்கின்றன. அப்படி விடுபட்டுப்போன கருத்துக்களிலே, "இராவணன், நரகாசுரன் முதலியவர்கள் தமிழர்கள்தாம்" என்ற கருத்தும் ஒன்றுகும் என்று வைத்துக் கொள்ளும்படி நேரிட்டாலும் கூட நாம் வியப்பொன்றும் அடைவதற்கில்லை. எந்த ஒரு தமிழ் நாட்டின் வரலாற்று நூலையும் முற்றும் முடிந்த முறையான வரலாற்று நூல் என்று வைத்துக்கொள்ள முடியாத நிலையில், அருள் நெறித் திருக்கூட்டத்தார் எந்தத் தமிழ்நாட்டு வரலாற்று நூலைத் தம் கையில் ஏந்திக் கொண்டு, அதில் மேற்கண்ட கருத்து இல்லை என்று சொல்லி, நம்மை வம்புக்கு இழுக்கிறார்களோ தெரியவில்லை.

பல்வேறு வகை வரலாற்றுச் சான்றுகளை எடுத்து வைத்துக் கொண்டு, அவற்றிடையே நிலவும் பல்வேறு வகைப் பொருத்தங்களைத் தொடர்புபடுத்திப் பார்த்துச் சில பல முடிவுகளுக்கு வந்து அவற்றை வரலாற்றுக் குறிப்புகளாகத் தருவதைத்தான் வரலாற்றுப் பேரறிஞர்கள் இதுநாள் வரையில் கையாண்டு வருகிறார்கள். உலக வரலாற்றுப் பேரறிஞர்களும், தமிழக வரலாற்றுப் பேரறிஞர்களும் சலியா உழைப்பின் காரணமாகக் கண்டறிந்த கருத்துக்களில், சிலவற்றைத் தொகுத்துதான், 'தமிழ்நாட்டு வரலாறு' என்ற பெயரில் சில பல நூல்கள் வெளியிடப்பட்டு வருகின்றன.

தமிழகத்தின், வரலாற்று அகச்சான்று, புறச்சான்றுகளை, நன்கு ஆராய்ந்து அறிந்த மேலைநாட்டு—கீழைநாட்டுச் சிறந்த வரலாற்றுப் பேரறிஞர்களிலே பலர், இதிகாசப் புராணங்களில் குறிப்பிடப்பட்டிருக்கும் அரக்கர்—அசுரர் என்ற பெயர்கள், உண்மையைப் புலப்படுத்தும் இடங்களில் தமிழர்களை—திராவிடர்களைத்தான் குறிக்கின்றன என்றும், இராவணன், நரகாசுரன் போன்றவர்கள் தமிழர்க

ளின் தலைவர்கள் என்றும், மறுக்க முடியாத காரணங்களால் சுட்டிக் காட்டித் தெளிவு படுத்தியுள்ளனர். நாமாக இட்டுக்கட்டி எதையும் நாம் கூறவில்லை.

இராவணனைப் போன்ற அசுரர்களையும், நரகாசுரன் போன்ற அசுரர்களையும் பற்றிக் குறிப்பிடும் இதிகாசப் புராணக் கதைகளைப் பொறுத்து மூன்று விதக் கருத்துக்கள் வரலாற்றுசிரியர்களால் பரிமாறப்படுகின்றன.

(1) இதிகாசப் புராணக் கதைகள் முழுக்க முழுக்கக் கற்பனைக் கட்டுக் கதைகள்தாம் என்று ஒரு சாராரும், (2) அவைகள் முழுக்க முழுக்க அப்படியே நடைபெற்ற உண்மைக் கதைகள்தாம் என்று வேறோர் சாராரும், (3) அவைகள் சில உண்மை வரலாற்று நிகழ்ச்சிகளை அடிப்படையாகக் கொண்டு கற்பனையால் புனைந்துரைக்கப்பட்ட கதைகள்தாம் என்று மற்றோர் சாராரும் குறிப்பிடுகின்றனர்.

முதல் சாராரின் கருத்துதான் உண்மை என்றால், அக்கதைகள் வரலாறு அல்லவா என்ற வாதப் பிரதிவாதங்களுக்குச் சிறிதும் இடமில்லை. அவைகள், ஆயிரத்தொரு அராபிக் கதைகள் போன்று பொழுது போக்கும் கதைகள் ஆகும் என்ற முடிவுக்கு வந்து விடலாம்.

உண்மை உலகியல் நிகழ்ச்சிக்கும், பகுத்தறிவு ஆராய்ச்சிக்கும் சிறிதும் பொருத்தமில்லாக் கருத்துக்கள் பலப்பல அக் கதைகளில் வருவதால், இரண்டாவது சாரார் கூறுகிறபடி அவைகளை முழுக்க முழுக்க அப்படியே உண்மை வரலாறுகளாக ஒரு பொழுதும் கொள்வதற்கில்லை. அந்தப்படி பார்த்தால் இரண்டாவது சாராரின் வாதமும் பொருட்படுத்த வேண்டாத ஒன்று என்ற முடிவுக்குத் தான் நாம் வரவேண்டியவர்களாக இருக்கிறோம்.

இதிகாசப் புராணக் கதைகளிலே பெரும்பாலானவை, புனைந்துரைக்கப்பட்ட கட்டுக்கதைகளேயாகும் என்றாலும், மூன்றாவது சாரார் கூறுகிறபடி, சிற்சில இதிகாசப் புராணக் கதைகள், குறிப்பாக இராவணன், நரகாசுரன் போன்றவர்களைக் குறிப்பிடும் இதிகாசப் புராணக் கதைகள், சில உண்மை வரலாற்றுக் குறிப்புகளை அடிப்படையாகக் கொண்டு புனைந்துரைக்கப்பட்ட கற்பனைக் கதைகளாகத்தான் இருக்க முடியும் என்ற முடிவுக்கு வருவது உண்மைக்கு மாறான ஒன்றாக ஆகவில்லை; ஏற்ற ஒன்றாகவே படுகின்றது.

இந்தியத் துணைக்கண்டம் முழுவதும் ஒரு காலத்தில் தமிழினத்தின் மூத்த குடியினரான மக்கள் வாழ்ந்து வந்தனர் என்றும், அவர்கள் நாகரிகமே மொகெஞ்சொதரோ—அரப்பா நாகரிகங்களாக விளங்கின என்றும், பிறகு ஆரியர்கள் இந்தியத் துணைக்கண்டத்தின் வடக்குப் பகுதி வழியாக நுழைந்தனர் என்றும், திராவிடர்க்கும் ஆரியர்களுக்கும் பற்பல போர்கள் நிகழ்ந்தன என்றும், திராவிடர்களை இழித்தும் பழித்தும் பேசித் தெற்கு நோக்கி விரட்டியடிப்பதிலும், அழிப்பதிலும் மிக மும்முரமாக ஈடுபட்டிருந்தனர் என்றும் மிகச் சிறந்த வரலாற்றுப் பேராசிரியர்களான டாக்டர் ஆல், டாக்டர் கால்டுவெல், இட்சி, ஆர். அண்டர், சர். சாண் மார்சல், ஆர். தி. பனேர்சி, ஈராசுப் பாதிரியார் போன்றவர்கள் தக்க சான்றுகளை எடுத்துக் காட்டித் தெள்ளத் தெளிய விளக்கியுள்ளனர்.

பண்டைத் தமிழர்களை—திராவிடர்களை ஆரிய இனத்தவர் அரக்கர் என்றும், அசுரர் என்றும் இழித்தும் பழித்தும் எழுதினர் என்றும் இராவணன், நரகாசுரன் போன்ற தமிழ் மன்னர்களை அரக்கர் என்றும், அசுரர்என்றும், கூறினர் என்றும் ஈராசுப் பாதிரியார், ஆர். தி. பனேர்சி, ராதா குமுத் முகர்சி. சாதுநாத சர்க்கார், டட், சி. கிருஷ்ணசாமி அய்யங்கார், பி. இராமச்சந்திர தீட்சதர், மறைமலையடிகள், வெ. ப. சுப்பிரமணியமுதலியார், கா. சு. பிள்ளை போன்றவர்கள் விளக்கமாகக் கூறி அதற்கான வரலாற்றுக் குறிப்புகளைத் தந்துள்ளனர்.

"அசுரர் அரக்கர் என்ற சொற்கள் தமிழரைக் குறிக்கும் என்பதற்குக் கல்வெட்டு, இலக்கியம், இலக்கணம், நிகண்டு முதலிய பண்டைத் தமிழர் வரலாறு கூறும் நூல்களில் ஆதாரம் காட்ட முடியுமா?" என்று அருள் நெறித் திருக் கூட்டத்தார் கேட்கின்றனர். பண்டைத் தமிழர் வரலாறு கூறும் நூல்கள் கூற மறந்த எவ்வளவோ வரலாற்று உண்மைகள் இப்பொழுது ஆராய்ந்து வெளியிடப்படுகின்றன என்பதைத் திருக் கூட்டத்தார் உணர வேண்டும். பண்டைத் தமிழர் வரலாறு கூறும் நூல்கள், எந்த ஆதாரங்களை அடிப்படையாகக் கொண்டு எழுதப்பட்டனவோ அவைகளையும், அந்தப் பண்டைத் தமிழர் வரலாறு கூறும் நூல்களையும் அடிப்படை ஆதாரங்களாகக் கொண்டுதான் மேலே குறிப்பிட்ட வரலாற்றுப் பேராசிரியர்கள் "இராவணன், நரகாசுரன் போன்றவர்கள் தமிழர்களாகத்தான் இருக்க வேண்டும்" என்ற முடிவுக்கு வந்துள்ளனர்.

ஆரியர்கள் தமிழர்களை அரக்கர் என்றும், அசுரர் என்றும் தம் நூல்களில் எழுதி வைத்துள்ளனர் என்ற உண்மையைப் பேராசிரியர் மறைமலையடிகளார் தாம் எழுதிய "பண்டைக் காலத் தமிழர் ஆரியர்" என்ற நூலிலும், "வேளாளர் நாகரிகம்" என்ற நூலிலும் தக்க சான்றுகள் காட்டி விளக்கியுள்ளார்.

பேராசிரியர் வெ. ப. சுப்பிரமணிய முதலியார் "இராமாயணமும் உள்ளுறைப் பொருளும்" என்ற நூலில் மேற்காட்டப்பட்ட கருத்தை வலியுறுத்தி கூறியுள்ளார்.

காலஞ்சென்ற திரு. வி. கலியாண சுந்தரனார் அவர்கள் நடத்தி வந்த 'நவசக்தி' 1929—30 ஆம் ஆண்டு இதழ் ஒன்றில், "இராமாயண காலத்திற்கு முன்னரே தமிழர் பிரபலமடைந்திருந்தனர். ஆரியருக்கும் இந்தியாவிலும் இலங்கையிலும் வாழ்ந்து வந்த ஆரியரல்லாத ஒருசார் மக்களுக்கும் நடந்த போரைச் சிறப்பித்துக் கூறுவதே இராமாயணமாகும். இப்போரில் ஆரியர் வெற்றியடைந்தது பிரசித்தம். அவர்கள் தங்கள் வெற்றிப் பிரதாபத்தைப் பலவாறு புனைந்துரைத்தனர். தங்கள் பகைவரை அரக்கர் என்று எழுதி வைத்தனர். அவர்கள் பெயர்களைத் தம் நூல்களில் புகுத்துங்கால் தம் மொழிக்குத் தக்கவாறு மொழி பெயர்த்துக்கொண்டனர். நடந்த விஷயங்கள் நூல்களில் புகுங்காலத்துப் பாரித்துத் தூலித்துப் போயின. உரல் விரலான சந்தர்ப்பங்களும் இல்லாமற் போகவில்லை" என்று குறிப்பிடப் பட்டிருப்பது இங்கு நோக்கத் தக்கதாகும்.

'மகளுக்குத் தந்தையின் கடிதங்கள்' என்ற நூலில் பண்டித நேரு, இராமாயணம் என்பது ஆரியர்--திராவிடர்க்கிடையே நடந்த போராட்டத்தைக் குறிப்பிடும் நூல் என்றும், அனுமான், இராவணன் போன்றவர்கள் திராவிட வீரர்களும் தலைவர்களும் ஆவார்கள் என்றும் அவர்கள் கறுப்பு நிறங் கொண்டிருந்த காரணத்தால் அவர்கள் குரங்கு என்றும், அரக்கர் என்றும் உணர்த்தப்பட்டார்கள் என்றும் எழுதியுள்ளார்.

இவ்வாறுள்ள வரலாற்றுக் குறிப்புக்களை வைத்துக் கொண்டு ஆராய்ச்சி செய்யும்போது இராவணன், நரகாசுரன் போன்றவர்கள் தமிழர்களாகத்தான் இருக்க வேண்டும் என்றும், அவர்கள் பெயர்கள் ஆரிய மொழிக்கேற்பத் திருத்தப்பட்டிருக்கின்றன என்றும் முடிவு செய்வது தவறாகாது என்பதை எவரும் புரிந்து கொள்ளலாம். இராவணன் நரகாசுரன் பற்றிக் குறிப்பிடப்படும் ஏனைய கருத்துக்களைக் காட்டிலும் இந்தக் கருத்துதான் ஏற்புடையதாகவும், பொருத்தமுடையதாகவும், வலிவுடையதாகவும் இருக்கிறது.

வினா: **"பெரியாரின் நாத்திகக் கொள்கையால் பீடிக்கப்பட்ட வாலிபர்கள் பலர் அடங்காப் பிடாரிகளாகவும், காம தூரர்களாகவும், கொள்ளைக் கூட்டத்தினராகவும் காட்சியளிப்பதைக் காணவும் கண் இல்லையா?" என்று விசுவாசம் என்ற கத்தோலிக் பாதிரியார் கூறுகிறரே அது பற்றிய கருத்து என்ன?**

விளக்கம்: விசுவாசப் பாதிரியார் திராவிட இயக்கங்களின் வளர்ச்சி கண்டு எவ்வளவு பொறுமைப் படுகிறர், எவ்வளவு மனப் புழுக்கம் அடைகிறர், எவ்வளவு ஆத்திரங் கொள்ளுகிறர் என்பதைத்தான் அவருடைய கூற்று எடுத்துக் காட்டுகிறது. "ஆத்திரக்காரனுக்கு புத்தி மட்டு" என்று ஒரு பழமொழி உண்டு. அதற்கு ஒரு சிறந்த எடுத்துக்காட்டாக விளங்குபவர்தான் விசுவாசப் பாதிரியார்.

பிறர்மீது அழுக்காறு கொண்டு, ஆத்திரப்பட்டு, அவர்களை வசைபாட முற்படும் சந்து முனையில் நிற்கும் இழி மக்கள், காரண காரிய விளக்கமின்றி வசைச் சொற்றொடர்களை வாரி வாரி வீசிக்கொண்டே இருப்பார்கள். விசுவாசப் பாதிரியார் அத்தகைய இழிமக்கள் நிலைக்கு வந்து பெரியாரின் 'நாத்திக'க் கொள்கையைப் பின்பற்றுபவர்களை "அடங்காப் பிடாரிகள்" என்றும், "காமதூரர்கள் என்றும், "கொள்ளைக் கூட்டத்தினர்" என்றும் வசை பாடுகிறர். இப்படிப்பட்ட ஒழுக்கக் கேடானவர்கள் 'சிலர்' அல்லவாம்; செய்பாதியாகச் சொல்லக்கூடிய 'பலரா'ம்! இந்த நிலைமை விசுவாசம் பாதிரியாருக்கு மட்டுந்தான் தெரிகிறதாம்; நாட்டிற்குத் தெரியவில்லையாம்! நாட்டு மக்களுக்கு இதனைக் "காணவும் கண் இல்லையா?" என்று நாட்டினரைப் பார்த்து ஏக்கத்தோடு கேட்கிறர்! விசுவாசப் பாதிரியார் காணும் ஒரு நிலைமையை, நாட்டினரால் கண்டுகொள்ள முடியவில்லையாம்! எனவேதான், தாம் காணும் காட்சியை, நாடு இன்னமும் காண முன் வரவில்லை என்று குறைபட்டுக் கொள்கிறர் விசுவாசப் பாதிரியார். இதற்கு என்ன காரணம்? விசுவாசச் சாமியார் குறிப்பிடும் நிலைமை உண்மையானதாக இருந்திருந்தால். நாட்டினரும் அவரைப்போல, கண்டுகொண்டிருந்திருப்பார்கள். நாடு கண்டு கொள்ள முடியாத ஒன்றை அவர் காணுகிறர் என்றால், அவரது கண்கள் அந்த அளவுக்கு ஆத்திரத்தால் கலங்கிப் போய் இருக்கின்றன. அவரது மனம் அழுக்காற்றால் புழுங்கிப்போய அவரது அறிவு நிலை தடுமாறிப் போயிருக்கிறது, அது குறித்து நாம் அவர்பால் கழிவிரக்கம் கொள்வோமாக!

பெரியாரின் பகுத்தறிவு இயக்கக் கொள்கைகளைப் பரப்பிடுவோரை யெல்லாம் ஒரு பக்கத்தில் நிறுத்தி, விசுவாசச் சாமியார் போற்றிப் புகழும் கத்தோலிக்க மதத்தைச் சார்ந்த ஆண் துறவிகளையும், பெண் துறவிகளையும் மற்றொரு பக்கத்தில் நிறுத்தி, இந்த இரு சாராரில் யார் "அடங்காப் பிடாரிகள்" யார் "காமதூரர்கள்?" யார் "கொள்ளைக் கூட்டத்தினர்" என்று நடுநிலைமை வகிக்கும் அறிவுடையோரைக் கேட்டால் அவர்கள் ஏற்ற விடை அளிப்பார்களே!

பொது மக்களுக்கு அடங்கிப் பணியாற்றுபவர்களும், பொதுமக்களைத் தோழமையுணர்ச்சியோடு நோக்குபவர்களும் பகுத்தறிவியக்கத்தினராவார். பொதுமக்களுக்கு ஆணை பிறப்பிப்பவர்களும், பொது மக்களை அடிமைகளாகக் கருதுபவர்களும் பாதிரியார் குழாத்தைச் சேர்ந்தவராவர். இவர்களில் எந்தச் சாரார் அடங்காப் பிடாரிகள்? பாதிரியார் குழாத்தினர் என்பது தெள்ளத் தெளிவாகுமே!

பகுத்தறிவியக்கத்தினர் இயற்கையுணர்ச்சிகளுக்கு நேர்மையாக இடமளித்து, நாணயமான முறையில் மனைவிமக்களோடு குடும்ப வாழ்க்கை நடத்துபவர்களாவார்கள். துறவுக் கோலம் பூண்ட ஆண்—பெண் சமயத் துறவிகள், வெளிப்படையாகத் திருமணத்தை வெறுத்து, மறைமுகமாகப் பல ஊழல்களுக்கு இடமளித்து வருபவர்களாவார்கள். இதனை உலகம் அறியும்; நாடு அறியும். ஆங்காங்கு சென்று அக்கம்பக்கத்தில் கேட்டறிந்தால், இதன் உண்மை எவருக்கும் விளங்கவே செய்யும். ஒழுக்கக்கேடான போப்பாண்டவர்கள் வாழ்ந்த விதத்தை, மேலைநாட்டு வரலாறுகளால் விரித்துரைக்கக் காண்கிறோம். இந்த இரு சாராரில் யார் காமதூரர்களாக விளங்கும் வகையில் வாழ்க்கையை அமைத்துக் கொண்டிருக்கிறார்கள்? துறவிகள் குழாம் என்பது தெள்ளத் தெளிவாகுமே!

பகுத்தறிவியக்கத்தினர் இதுவரையில் பொதுமக்களிடத்தில் திரட்டியுள்ள தொகையையும், பாதிரியார் குழாம் திரட்டியுள்ள தொகையையும் நடுநிலையாளர்கள் கணக்கிட்டுப் பார்க்கட்டும்! இரு சாராரில் யார் கொள்ளைக் கூட்டத்தினர்? பாதிரியார் குழாத்தினர் என்பது நன்கு புலனாகுமே!

இந்தியத் துணைக்கண்டத்திலும் சரி, கத்தோலிக்க நாடுகளிலும்சரி அடங்காமை-காமம்—கொள்ளை காரணமாகச் சிறையில் அடைக்கப் பட்டிருப்பவர்கள் அத்துணைப்பேரும் நாத்திகர்கள் அல்லவே! அவர்களில் முக்காலே மூன்று வீசம் பேர்கள் விசுவாசப் பாதிரியாரைப் போன்ற கடவுள் நம்பிக்கையாளர்கள் தான்—சமயப் பற்றுடையவர்கள்தான்! கண்ணாடி வீட்டில் இருந்துகொண்டு, கல் வீட்டின் மீது ஏன் விசுவாசச் சாமியார் கல்லை எடுத்து எறிகிறாரோ, தெரியவில்லை, கல் வீட்டில் இருப்பவர் திரும்பக் கல்லை எடுத்து கண்ணாடி வீட்டில் எறிந்தால், கண்ணாடி வீடு என்ன ஆகும் என்பதை விசுவாசச் சாமியார் ஏனோ புரிந்துகொள்ளவில்லை!

நல்லவர்களும், ஒழுக்கக் கேடர்களும் இரு சாராரிலும் இருக்கக்கூடும். அதனை யாரும் மறுக்க இயலாது. நல்லவர்கள் எல்லாம் கத்தோலிக்கச் சமயத்தில் இருப்பது போலவும், ஒழுக்கக் கேடர்களெல்லாம் பகுத்தறிவு இயக்கத்தில் இருப்பது போலவும் எண்ணிக்கொண்டு விசுவாசச் சாமியார் இழிநிலையில் நின்று புலம்புகிறார். புலம்பல் வேண்டாம்—புன்மை தேடிக்கொள்ள வேண்டாம் என்று விசுவாசச் சாமியாருக்கு நாம் உரைப்போமாக!

'மன்றம்' சந்தா விபரம்

	உள்நாடு	வெளிநாடு
ஆண்டுக் கட்டணம்	6—0—0	7—8—0
ஆறு திங்கள் ,,	3—0—0	
தனி இதழ் ,,	0—4—0	0—5—0

இலங்கைக்கு வி. பி. மூலம்
ஆண்டுக் கட்டணம் 7—8—0

கன்னித்வர்ஸ்த்தான்

எம்மன்டின்ஜன், கன்டல்பின்ஜன், ஆம்ஸ்ட்டர்டாம் முதலிய நகரங்களில் இருக்கும் பொழுது, ஒரு மனிதனுக்கு வாழ்வு ரோஜா மெத்தையாக இல்லாவிட்டாலும், கிடைப்பதைக் கொண்டு வாழ்வை திருப்தியாக நடத்தத் தெரிந்துகொள்வான். ஒரு ஜெர்மானிய சுற்றுப் பயணக்காரன் ஆம்ஸ்ட்டர்டாமில் சுற்றி வரும்பொழுது இதே பாடத்தைப் பெற்றது மிகவும் வேடிக்கையான தொன்றுகும்.

மிகப் பெரியதும், செழிப்பு வாய்ந்ததுமான அவ்வாணிப நகருக்கு வந்ததும், மிகவும் அழகான வீடுகளேயும், பெரும் கப்பல்களேயும் சுறுசுறுப்பான மக்களேயும் கண்டான். காத்திலிங்கனிலிருந்து ஆம்ஸ்டர்டாம் வரையில் அவன் பயணத்தில் அவன் பார்த்த எல்லா வீடுகளேக் காட்டிலும் மிக அழகானதும் பெரியதுமான ஒரு வீட்டைப் பார்த்தான். மதிப்பு உயர்ந்த அந்தக் கட்டிடத்தை அதிசயமாகப் பார்த்துக்கொண்டே இருந்தான். மாளிகையின் உச்சியில் உள்ள ஆறு உயர்ந்த கோபுரங்கள், கட்டிடத்தை அழகுபடுத்தும் வண்ண ஓவியங்கள், உயர்ந்த சன்னல் கதவுகள்—தன் வீட்டுக் கதவுகளேவிட உயரமாயிருந்தன—முதலியவற்றை வியப்புடன் பார்த்துக் கொண்டேயிருந்தான்.

மாளிகையைப்பற்றி அறிந்துகொள்ள வேண்டும் என்ற ஆவல் தூண்ட வழியில் சென்ற ஒருவனேப் பார்த்து, 'நண்ப! அழகுப் பூக்களேக்கொண்டு வண்ண ஓவியமாகத் திகழும் இந்த அதிசய மாளிகையின் சொந்தக்காரர் யார்?" என்று கேட்டான் செர்மனி மொழியில், வழியில் வந்தவனுக்கு வேறு அவசரமான வேலே இருந்ததோ என்னவோ, "கன்னித்வர்ஸ்த்தான்" என்று டச்சு மொழியில் கூறிச் சென்றுன். செர்மானியனுக்கு டச்சு மொழி புரியவில்லே. "கன்னித்வர்ஸ்த்தான்" என்பது அந்த மாளிகைக்குச் சொந்தக்காரரின் பெயர் என்று நினேத்துக் கொண்டான் செர்மானியன். "கன்னித்வர்ஸ்த்தான்" பெரிய பணக்காரனுக இருக்கவேண்டும் என்று நினேத்துக்கொண்டான். குறுகிய வீதிகள் பலவற்றைக் கடந்து துறைமுகத்திற்கு வந்து சேர்ந்தான். அங்கு பல கப்பல்கள், சிறிய படகுகள் முதலியவற்றிலிருந்து நிறைய சாமான்களே ஏற்றிக்கொண்டும், இறக்கிக் கொண்டும் இருந்தார்கள். அவற்றில் மிகப்பெரிய கப்பல் ஒன்று கிழக்கு இந்தியத் தீவுகளிலிருந்து சாமான்களே ஏற்றிக்கொண்டு வந்திருந்தது. அதிலிருந்து சாமான்களே இறக்கிக்கொண்டிருந்தனர். பெரும் மரங்கள், துணிகள், காப்பிக்கொட்டை, இனிப்புத் தின்பண்டங்கள், அரிசி, மிளகு, வாசனேத் திரவியங்கள் முதலியன கப்பல்களிலிருந்து இறக்கப்பட்டன. இவைகளின் இடையே எலிகளும் காணப்பட்டன!

வெகு நேரம் இவற்றைப் பார்த்துக் கொண்டேயிருந்தான். மரத்தைத் தோளில் தூக்கிச் செல்லும் தொழிலாளி ஒருவனேப் பார்த்து, கடலில் இந்தக் கப்பல்கள் கொண்டு வரும் பெரும் பொருள்களுக்கு உரியவன் யார் என்று கேட்டான். தொழிலாளி "கன்னித்வர்ஸ்த்தான்" என்று சொல்லிச் சென்றுன்.

"கடல் குவிக்கும் செல்வங்களிலிருந்து தன் வீட்டை அவன் அழகு படுத்துவதில் வியப்பொன்றுமில்லே" என நினேத்தான். இந்த உலகில் "கன்னித்வர்ஸ்த்தான்" போன்ற பெரும் தனவந்தர்களுக்கு நடுவில் தன்னேப் போன்ற பரம ஏழையும் இருக்கின்றேனே என தன் நிலே குறித்து வருந்தினுன். "கன்னித்வர்ஸ்த்தான் மாதிரி, நானும் ஒரு நாள் பெரும் பணக்காரனுக விரும்புகிறேன்" என்று சொல்லிக் கொண்டான். பிறகு அங்கிருந்து நடந்து ஒரு மூலேயில் திரும்பி வரும்பொழுது ஒரு பெரும் சவ ஊர்வலத்தைப் பார்த்தான். உயிரும், உணர்வும் அடங்கி ஒடுங்கிய ஒரு சடலத்தை என்றும் அழியாத அமைதியை நோக்கி இரண்டு கருப்புத் துணி போர்த்திய குதிரைகள் மெதுவாக இழுத்துக்கொண்டு சென்றன. இறந்தவரின் உறவினர்களும் நண்பர்களும் சிறு சிறு கும்பலாக கருப்பு உடை யுடுத்தி வருத்தத்துடன் வந்துகொண்டிருந்தனர். எங்கோ தொலே தூரத்தில் உள்ள மாதா கோயிலில் மணியடிக்கும் சப்தம்

கேட்டது. சவ ஊர்வலத்தைக் காணும் நல்லவர்கள் மனதில் எழும் துயர உணர்ச்சி மேலிட தலையிலிருந்த தொப்பியைக் கையில் எடுத்துக் கொண்டு, ஊர்வலம் முடியும்வரை மௌனமாக நின்று கொண்டிருந்தனர். கடைசியாக ஒருவன், பருத்தி பொதி 10 ரூபாய் கூடினால் தனக்கு எவ்வளவு லாபம் வரும் என்று கணக்குப் போட்டுக்கொண்டு வந்தான். அவனை நெருங்கி, "மன்னிக்கவும், மாதா கோயில் மணி துயர ஒலி எழுப்ப, வருத்தத்துடன் நீ தொடர்ந்து செல்லும் இந்தப் பிணம் யாருடையது உன் நண்பனாகத்தான் அவன் இருக்க வேண்டும்" என்று கேட்டான் செர்மானியன்.

பருத்திக் கணக்குப் போட்டுக்கொண்டு வந்தவன் "கன்னித்வர்ஸ்த்தான்" என்று கூறிச்சென்றான். காத்திலிங்கனிலிருந்து வந்த செர்மானியப் பிரயாணியின் கண்களிலிருந்து இரண்டு துளிக் கண்ணீர் உருண்டோடியது. மிகவும் துயரடைந்தவனாய், "பாவம்! கன்னித்வர்ஸ்த்தான், நிறைந்த செல்வத்தையுடைய நீ இப்பொழுது என்ன வைத்திருக்கிறாய்? பரம ஏழையான நான் இறக்கும் பொழுது என்ன இருக்குமோ அதுதான் இருக்கிறது. பிணத்தை மூடியிருக்கும் ஒரு பெரிய துணி! அழகான பூத்தொட்டிகளிலிருந்து உன் சில்லிட்ட நெஞ்சில் ஒரு பூ! சவப்பெட்டியில் சில பூக்கள்!" இந்த எண்ணத்துடன், இறந்தவனுக்கு நெருங்கியவன் போல அவனும் சவ ஊர்வலத்தில் கலந்து கொண்டு மயானத்திற்குச் சென்றான். மயானத்தில் கன்னித்வர்ஸ்த்தான் தன் இறுதி இடத்தில் அமரும்வரை வருத்தத்துடன் இருந்தான். தன் நாட்டில் தான் கேட்க மறந்த கல்லறைச் சொற்பொழிவுகளைவிட தனக்கு அர்த்தம் புரியாத டச்சுக் கல்லறைப் பேச்சினால் மனம் உருகினான்.

சவ அடக்கம் முடிந்ததும், தன் மொழி அறிந்த ஒரு விடுதிக்குச் சென்று பசியார உணவருந்தினான். இந்நிகழ்ச்சிகளுக்குப் பிறகு எப்பொழுதாவது, உலகில் எவ்வளவோ பேர் பணக்காரர்களாக இருக்கத் தான்மட்டும் ஏழையாக இருக்கிறோமே என்ற எண்ணம் வந்தால், ஆம்ஸ்டர்டாம் கன்னித்வர்ஸ்த்தானைப் பற்றியும், அவன் பெரிய மாளிகை, கப்பலில் அவனுக்கு வந்து இறங்கிய உயர்ந்த சரக்குகள் இவைகள் பற்றியும் அவற்றைத் தொடர்ந்து கன்னித்வர்ஸ்த்தானை அடக்கம் செய்த குறுகிய சமாதியைப் பற்றியும் நினைத்துத் தேற்றிக் கொள்வான்.

[டச்சு மொழியில் "கன்னித்வர்ஸ்த்தான்" என்றால் 'நீ சொல்லுவது எனக்கு விளங்கவில்லை' என்று பொருள். மொழி புரியாமல், நடந்த நிகழ்ச்சிகளை தன் எண்ணத்தின்படி புரிந்து கொண்டான். செர்மன் சிறுகதையொன்றின் மொழி பெயர்ப்பாகும். இதை எழுதியவர் ஜோன் பீட்டர் ஹெபல் என்பவராகும்.]

ஓட்டலுக்குச் சாப்பிட வந்தவர் குழம்புச் சோற்றை முடித்துவிட்டு அடுத்த வரவுக்குக் காத்திருந்தார். பறிமாறுபவன் உள்ளே போய்விட்டுத் திரும்பி வந்தானே யொழிய, வேறெதுவும் வரவில்லை.

"ரசம் கொண்டுவா!" என்று சாப்பிடுபவர் கட்டளையிட்டார்.

"ரசமா, இருங்கள்!" என்று பறிமாறுபவன் உள்ளே போய்த் திரும்பி வந்து "ரசம் ஆகிவிட்டது" என்றான்.

சாப்பிடுபவருக்குக் கோபம் வந்தது. ஆனால் கோபித்து என்ன பலன்? பசியடங்கவில்லை. ரசத்துக்குப் பதில் மறுபடியும் குழம்பிலிருந்து ஆரம்பிக்கலாம் என்று "குழம்பு கொண்டுவா!" எனக் கேட்டார்.

பறிமாறுபவனுக்கு அலுப்புத் தட்டியது. "என்ன, ஐயா! ரசம் கேட்டபொழுது இல்லையென்றேன், மறுபடியும் குழம்பு எங்கிருந்து கிடைக்கும்?"

வதந்தியின் விளைவு

[ராதா]

"அன்னபூரணி! அன்னபூரணி!" என்று ஹாலிலிருந்து சோமநாத முதலியார் எழுப்பிய குரல் வீட்டையே கிடுகிடுக்கச் செய்தது. கண்கள் சிவந்திருந்தன. மீசையை முறுக்கிவிட்டபடி அங்குமிங்கும் நடை போட்டுக்கொண்டிருந்தார், கையிலே ஒரு கடிதத்தை வைத்துக் கொண்டு.

அடுப்பங்கரை வேலைகளை அப்படியே போட்டுவிட்டு ஓடிவந்தாள் அன்னபூரணியம்மாள்.

"ஏன் இப்படிக் கத்தனும், வெள்ளமும் புயலும் வந்துடுச்சா என்ன?"

"வெள்ளம் வந்து தலைக்கு மேலேபோயிட்டுதடி! தலைக்கு மேலே போயிட்டுது!"

"என்னதான்னு சொல்லிட்டு கத்துங்க!"

"ஆமா, நான் கத்றேன்! விஷயத்தைச் சொன்னா இப்ப நீ ஒப்பாரியே வைச்சுடுவே!"

"மளமளன்னு பொறிஞ்சி விழுறிங்களே யொழிய விஷயத்தைச் சொன்னாதானே!"

"நல்லா, ரெண்டு காதையும் தீட்டிகிட்டு கேளு. உன்னோட அருந்தவப் புதல்வன் இருக்கானே......"

"உங்களுக்கு இதான் வேலை, அவனை எப்பவும் குறை கூறிகிட்டே இருக்கணும்!"

"நீதான் மெச்சிக்கணும் அவனை. உன்னோட செல்லந்தானே அவனை இந்த நிலைக்கு கொண்டுவந்து விட்டிருக்கு! வேண்டாம், வேண்டாம்னு எவ்வளவோ சொன்னேன். பணத்தை பாழாக்கி படிக்கவைச்சே. பேசாமே கடையை கவனித்து வந்திருந்தா இந்த நிலையும் ஏற்பட்டிருக்காது, மானேசருக்கு கொடுக்கிற நூத்தியம்பது ரூபாயும் மிச்சமா யிருக்கும்!"

"இப்ப என்ன வந்திடுச்சு பாஸ்கரனுக்கு!"

"விஷயம் வெளியே பரவின நான் தலை காட்ட முடியாதடி! தலைகாட்ட முடியாது!"

"என்னதான் செஞ்சுட்டான்"

"இன்னும் என்னதான் இருக்கு செய்யறத்துக்கு, எல்லாத்தையும் செய்தாச்சு! காதலாம்! கத்தரிக்காயாம்! எந்தத் தறுதலைப் பயமவளோடேயோ தொடர்பு வைச்சுகிட்டு இருக்கான். அவ எழுதியிருக்கா இந்தக் கடிதம்!"

"யாருக்கு எழுதியிருக்கா?"

"எனக்கு எழுதியிருக்கா! ஆளைப்பாரு! தலைதலைன்னு அடிச்சுகிட்டு நாலு நாழியா பிள்ளையாண்டான் திருவிளையாடலை சொல்லிகிட்டு இருக்கேன், யாருக்குன்னு நீ கேக்கிறே!"

"ஐயையோ! நம்ம பாஸ்கரனா! அந்தப் பொண்ணு யாரு?"

"யாரோ வசந்தாவாம்—உயிருள்ளவரை, இந்த துரையை அவ மறக்கமாட்டாளாம்—இன்னும் என்னென்னமோ எழுதியிருக்கா! என்ன ஜாதியோ! என்ன சனியனோ! பணக்காரன் வீட்டுப் பிள்ளையில்ல, வலை வீசியிருப்பா.

நம்ம குலமென்ன! அந்தஸ்து என்ன! விஷயம் வெளியே தெரிஞ்சா.........என் மானம் போச்சு! மரியாதை போச்சு!

ஊரிலே இருக்கிற பெரியமனுஷனையெல்லாம் சரிகட்டிக்கிட்டு வரேன். வருகிற தேர்தல் வரையிலாவது நமக்கு மதிப்பு இருந்தால் தானே நல்லது!

என் திட்டத்தையெல்லாம் தவிடுபொடியாக்கிடுவான் போலேயிருக்கே!—ம்...... அவன் வரட்டும் இன்னிக்கு இரண்டிலே ஒன்னுன்னு கேட்டுடணும்!

"அதோ வந்திட்டான் அவனும், அதட்டாம உருட்டாம விஷயத்தை மெதுவாக் கேளுங்க"

"இதுவரை உன் பேச்சைக் கேட்டது போதும் முதல்லே நீ உள்ளே போ! டேய் பாஸ்கர் இங்கேவா, மணி என்ன ஆச்சு?"

" கரைக்டா ஒன்பதரையாச்சு !"

" மணியா சொல்றே எனக்கு ! ஏண்டா இவ்வளவு நாழி ?"

பாஸ்கரன் எதிர்பார்க்கவில்லே, தந்தையின் கோபத்தைக் கண்டு நடுங்கிவிட்டான்.

" இன்னிக்கு காலேஜில் டிராமா ரிகர்ஸல் வர நாழி யாகும்னும் சொல்லிட்டுத்தான் போனேன்."

" பெரிய துரைமவன், சொல்லிட்டுப் போனு ராம் ! நீ படிச்சு கூத்தடிக்கிற விஷயந்தான் தெரியுதே ! யாரடா அந்தப் பொண்ணு !"

" எந்தப் பொண்ணு ?"

" ஒன்னும் தெரியாதவரு மாதிரியில்ல வேஷம் போடுருரு ! தோலே உரிச்சுடுவேன், உண்மையை சொல்லிடு யாரடாவ—வசந்தா ?"

" ஓ அந்தக் கடிதத்தைப் பார்த்திட்டிங் களா !"

" எத்தனே நாளேக்குதான் எங்கிட்ட விஷ யத்தை மறைக்க முடியும்."

" இல்லேப்பா, அந்தக் கடிதம் உண்மைக் கடிதமல்ல—ஒரு மொட்டைக் கடிதம் என்னே அவமானப்படுத்த யாரோ எழுதியிருக்காங்க!"

"டேய் கடிதம் வந்து ஒரு வாரமாகிறது, என்கிட்ட இத்தனே நாளும் சொல்லலே. கடி தத்தை நான் பார்த்தவுடன் அது பொய்க் கடிதம்னு சொல்றே ! ஒளிக்காம சொல்லிடு யாரவ ? எங்கே இருக்கா ? என்ன ஜாதி ?"

"எனக்குக் கடிதம்வந்ததைத்தவிரவேருென் றும் தெரியாது. சத்தியமா இது உண்மை. வேணும்னு யாரையுங் கேளுங்க."

" இதைப்போய் வெளியே விசாரிச்சா என் மானமில்ல போயிடும் ! இன்னிக்கு என்ன ஆனுலும் சரி. உண்மையைச் சொல்லிடு. இல்லேன்னு நான் உனக்கு அப்பனுமில்லே, நீ எனக்கு மகனுமில்லே ! ஆமாம் !"

" அப்பா ! என்னே என்ன செய்தாலும் சரி. உண்மை இதுதான். எனக்கு எவளிடமும் காதல் கீதல் கிடையாது. வசந்தா யாருன்னே எனக்குத் தெரியாது. இனி உங்க இஷ்டம்."

" அவன்தான் ஒண்ணுமில்லேன்னு சொல் ருனே ! விடுங்களேன் " அன்னபூரணியம்மாள் பாஸ்கரனுக்குச் சாதகமாகப் பேசினுள்.

" எனக்கு என்னமோ நம்பிக்கையில்லே. இவ னுக்கு ஏன் ஒருத்தன் மொட்டைக் கடிதம் போடணும். என்ன ஆனுலும் சரி, அவன் அந்த வசந்தாவை மறந்திட வேண்டியது தான். நான் பார்த்து ஏற்பாடு செய்ற பெண் ணேத்தான் கல்யாணம் செய்துகொள்ளணும். இதுக்கு சம்மதம்னு இந்த வீட்டிலே இருக்கச் சொல்லு ! இல்லேன்னு இப்பவே வெளியே கிளம்பட்டும், எவளேயும் கல்யாணம் செய்து கொள்ளட்டும்."

" என்னமும் செய்யுங்க! கல்லேக்காட்டி தாலி கட்டச் சொன்னுலும் செய்துவிடுகிறேன் " பாஸ்கரன் ஆத்திரத்துடன் கூறிவிட்டு மாடிக்குச் சென்றுவிட்டான்.

* * *

வசந்தா—பாஸ்கரன் கேள்விப்படாத பெயர். கடிதம் யார் எழுதினுர்கள் என்பதைத் தெரி ந்துகொள்ளவே முடியவில்லே. எவரிடமும் கடிதத்தைப்பற்றி சொல்லக்கூடாது என்று எண்ணியிருந்தான். ஆனுல் சோமநாதரின் பார்வையில் பட்டுவிட்டது ; சோல்லம்புக ளுக்கு இரையானுன்.

இவ்வளவு வயதடைந்தபிறகும் தந்தை தன் னேத் திட்டுகிருரே என்று மனமுடைந்தான். டிராமா முதலிய காரியங்களில் ஈடுபடாது படிப் பையே முக்கியமாகக் கவனிக்க வேண்டும் என்ற எண்ணத்துடன் மறுநாள் கல்லூரிக் குச் சென்ருன்.

ஆனுல் எப்படியோ பாஸ்கர்—வசந்தா விஷ யம் கல்லூரி மாணவர்களிடையே பரவியிருந் தது. பாஸ்கரன் இதை எதிர்பார்க்கவே யில்லே : ஒருவருக்கும் தெரியாது என்றுதான் எண்ணியிருந்தான். அவனேச் சுட்டிக் காட்டி மாணவர்கள் மறைமுகமாகப் பேசினுர்கள். குறும்பர்கள் கதைகள் கட்டி உலவவிட்டார் கள். வதந்தி கல்லூரிமுழுவதிலும் ஒரேநாளில் பரவிவிட்டது. பாஸ்கரனேயும் வசந்தாவையும் அங்கே பார்த்தோம் இங்கே பார்த்தோம் என்று சிலர் பேசினர். " பாஸ்கரனும் அவ ளும் சேர்ந்து செல்வதை நான் அடிக்கடி பார்த்திருக்கிறேன். அவள் மகளிர் கல்லூரி யில் படிக்கிருள் " என்றுகூட ஒருவன் கூறி னுன்.

பாஸ்கரனுல் எவரிடமும் பேச முடியவில்லே ; மற்றவர் பேசுவதையும் கேட்க முடியவில்லே. மனமுடைந்தவனுக வருத்தத்துடன் வீடு திரும்பினுன் மாலே வகுப்பிற்குச் செல்லாமல்.

வழக்கமாக திரும்பும் நேரத்திற்கு முன்னதாகவே வந்த பாஸ்கரனை சோமநாதர், "ஏன், இப்ப காலேஜ் கிடையாதா?" என்று கேட்டார்.

"இருக்கிறது. நான்தான் போகவில்லை" என்று கூறிவிட்டு மாடிக்குச் செல்ல அடி வைத்தான்.

"ஏய், இந்தாடா, ஏண்டா போகலே, உடம்பு சரியாயில்லையா?"

"ஆமாம், உடம்பு சரியாக இல்லை. காலேஜில் இன்னும் இருந்தால் என்னை பயித்தியக்கார ஆஸ்பத்திரிக்குத்தான் அனுப்பியிருப்பார்கள். அப்பா! இனி நான் காலேஜிக்குப் போகப்போவதில்லை. என் படிப்புக்கு முற்றுப் புள்ளி வைத்துவிட்டேன். உங்கள் பணத்தையும் பாழாக்கமாட்டேன். உங்கள் அந்தஸ்து, கௌரவம், குல முறைகள் எவற்றிற்கும் ஊறு தேடமாட்டேன்."

பாஸ்கரன் அவ்விடத்தைவிட்டு நகர்ந்தான். சோமநாத முதலியார் அசந்து போய்விட்டார் அவன் கூறிய சொற்களைக் கேட்டு.

* * *

"ஏண்டா, தெரியுமா சேதி. நம்ம காலேஜ் ஆண்டு விழாவில் நடக்கிறதாக இருந்த டிராமா நடக்காதாம்." என்று கூறிக்கொண்டே சொக்கலிங்கம் கனகசபையின் அறையில் வந்து உட்கார்ந்தான்.

"யார் சொன்னு?" என்று கனகசபை கேட்டான்.

"புரொபசர்தான் சொன்னுர். பாஸ்கரன் காலேஜை விட்டு நின்றுவிட்டதாக கடிதம் எழுதியிருக்கானும். ஆகவே அவனுல் நடத்தப்பெற்று வந்த டிராமாவும் அவ்வளவுதானும்."

"சபாஷ், இதைத்தான் நான் எதிர்பார்த்திருந்தேன்."

"எதை, ஆண்டு விழாவில் டிராமா இருக்கக் கூடாதென்று?"

"இல்லை பாஸ்கரன் நடத்தும் டிராமா எப்படியாவது நின்றுவிடவேண்டும் என்பதுதான் என் நோக்கம்."

"அடப்பாவி! ஏண்டா உனக்கு இந்த கெட்ட எண்ணம்? உனக்கு பெண்வேஷம் பொருத்தம் என்று அவன் சொன்னதால் அவன் நடத்தும் நாடகமே நடைபெறக் கூடாதா என்ன? பிரபல நடிகர்களெல்லாம் பெண்வேஷம் போட்டுத்தாண்டா ராஜப்பார்டானுங்க, நீ என்னமோ அதைக் கேவலமா நினைக்கிறே"

"ஏய்! உங்கிட்ட நியாயமா கேட்டேன்? அவனவன் சும்மா யிருக்கும்போதே பட்டப் பெயர்கள் அளவில்லாம வந்தபடி இருக்கு. நாடகத்தில் பெண்ணுகத் தோன்றிவிட்டால், விடுவான்களா இந்தப் பசங்க, சும்மா இருந்த வாய்க்கு அவல்பொறி கிடைத்தமாதிரியாயிடும்."

"இப்பமட்டும் என்னவாம்! 'ஸ்திரிபார்ட்டு' ன்னு நேரிலே சொல்லாவிட்டாலும் மறைமுகமாகத்தான் சொல்கிருர்களே!"

"இவ்வளவும் அந்தப் பய பாஸ்கரனுல் தானே! அவனை பழிக்குப் பழி வாங்காமல் விடப்போவதில்லை!"

"உனக்கு சேதி தெரியுமோ? அவன் அந்த வசந்தாவைத்தான் மணந்துகொள்ளப் போவதாகக் கூறுகிருனும். ஆனுல் அவன் தந்தையின் எதிர்ப்பு பலமாக இருக்கிறதாம். அதன் காரணமாகத்தான் அவன் படிப்பும் நின்றுவிட்டதாகச் சொல்கிருர்கள்."

"பேஷ்! கதை வளர்ந்துகொண்டே போகிறதே!"

"அவளும் ஏதோ செட்டியார் வகுப்பைச் சேர்ந்தவளாம். ஆனுல் அவளைப்பற்றிய முழு விபரந்தான் சரியாத் தெரியலே."

"இன்னும் இரண்டு நாள் இதைப்பற்றிப் பேசிக்கொண்டேயிருந்தால் எல்லாம் தெரிந்துவிடும்!"

"ஆளைப் பார்த்தா சாதுபோல அடக்க வொடுக்கமா எப்படியிருந்தான். இவ்வளவு துணிச்சலான பேர்வழி என்று எனக்குத் தெரியாது!"

"ஏய்! நேரம் வீணுகுது. நாளைக்கு இந்த நாலு புஸ்தகங்களையும் படிச்சு முடிக்கணும் நான். பாஸ்கரனைப்பற்றி முழு விபரங்களையும் சேகரித்துக்கொண்டு நாளைக்கு வந்து சொல்லு. இப்ப நான் படிக்கலாம்னு நினைக்கிறேன்!"

"சரிதானப்பா! நான் ஏன் உன் படிப்புக்கு குறுக்கே இருக்கணும். இதோ போறேன்!

கொஞ்ச நாழி இப்படி 'ரெஸ்ட்' எடுத்துக்கலா முன்னுதான் நானும் வந்தேன்!"

சொக்கலிங்கம் அறையை விட்டு வெளியே றினன். கனகசபை புத்தகங்களைப் பிரித்து வைத்திருந்தானேயொழிய அவன் கவனமெல் லாம் பாஸ்கரன்—வசந்தா பற்றியே சென்று கொண்டிருந்தது. பின்னல் வந்து நின்ற அறை நண்பனுன மணியைக்கூட அவன் கவ னிக்கவில்லை.

"என்ன, யோசனை பலமாயிருக்கு! இன்னும் யாருக்குக் கடிதம் எழுதலாம்னு?"

"கடிதம் எழுதுவதா! என்னடா சொல்றே?"

"டேய் எங்கிட்டேயே நீ மறைக்கிறிய! உன் வேலையெல்லாம் எனக்குத் தெரியாதுன்னு நினைச்ச."

"அப்ப......"

"நீ பாஸ்கரனுக்கு எழுதிய கடிதத்தை நானே படிச்சேன்"

கனகசபை எழுந்து சென்று அறைக் கத வைத் தாளிட்டுவிட்டு வந்து படபடப்புடன் உட்கார்ந்தான்.

"பாஸ்கரனுக்குத் தெரிஞ்சுபோச்சா நான் தான் எழுதியிருக்கேன்னு?"

"அவனுக்குத் தெரியாது! ஆனல் எனக் குத் தெரியும்!"

"எப்படிடா?"

"ஏண்டா! அந்தக் கடிதம் எழுத எதிலே யிருந்து பேப்பர் கிழிச்சே!"

"ஏய்! என் மூளை குழம்புது, ஒன்னும் புரியலை, விபரமா சொல்டா"

"பாஸ்கரன் ஆளையே காணுமே, அவனைப் பார்த்துவரலாம் என்று போனேன். அவனும் வீட்டிலே யிருந்தான். அவனுடைய காதல் விஷயத்தைக் கேட்டேன். அவன் விபரமாச் சொல்லி அந்தக் கடிதத்தையும் காட்டினன். அதைப் பார்த்தபிறகுதான் நீ எழுதியிருக்க ணுமென்று தோன்றியது. கையெழுத்தை மாற்றி எழுதினியேதவிர எழுதிய தாளை என் னுடைய மேசையிலிருந்துதான் எடுத்திருக் கே! அந்தத் தாள் காட்டிக்கொடுத்துவிட்டது உன்னை."

கனகசபை மௌனமாக இருந்தான். கொஞ் சம் பயம் உண்டாகவும் ஆரம்பித்தது.

"ஏய்! யாருகிட்டேயும் சொல்லிடாதேடா!"

"ஏண்டா, உனக்கு இந்த வேலை. உன்னல் அவன் படிப்பு போச்சு, வீட்டிலே சண்டை, காலேஜில் அவமானம், அவன் மேல் இருந்த கோபத்தை இப்படியாக் காட்டுவது, இப்ப என்ன செய்யப்போற?"

"நான் நடக்கப்போவதை நினைக்காமதான் எழுதிவிட்டேன். எனக்கு ஒன்றுமே புரிய லிய இப்ப!"

"நல்ல வேளை! நம்ம காலேஜில் படிக்கிற பெண்களை விட்டு, வேறு ஏதோ ஒரு பெய ரைப் போட்டிருக்கே! ஆமாம்...வசந்தான்னு யாரையும் முக்கியமா நினைச்சுதான் எழுதி யா?"

"இல்லை. ஒரு பெயருக்குதான் போட் டேன்"

"வார்டன், பிரின்சுபாலுக்கு விஷயம் தெரி ஞ்சா அவ்வளவுதான் உன் கதி! பேசாம, நேரே பாஸ்கரனிடம் போய் மன்னிப்பு கேட்டுக் கொள்."

"இப்ப எப்படிடா போவது? அவன் பிரின் சிபாலிடம் சொல்லிட்டான்னு!"

"நான் சொல்லவேண்டியதை சொல்லிவிட் டேன் இனி உன் இஷ்டம். நான் யாரிடமும் சொல்லமாட்டேன். ஆனல் வேறு யாரும் கண்டுபிடித்துவிட்டால் ஆபத்துதான். யோசி த்து செய்யவேண்டியதைச் சீக்கிரம்செய்.

* * *

பாஸ்கரன் கல்லூரிக்குப் போகாது நின்று ஐந்து நாட்களாகிவிட்டன. அதற்குள் பல நண்பர்கள் வந்து பார்த்து சென்றனர். அவர் களிடமிருந்து தன்னைப்பற்றி காலேஜில் பேசப் படும் கதைகளையெல்லாம் அறிந்தான். அவ னுக்கு வேடிக்கையாகவும் இருந்தது, வதந் திக்கு இப்படிப்பட்ட வேகம் இருக்கிறதே என்று நினைக்கும்போது. எல்லாவற்றையும் விட அன்று வந்த செய்தியொன்று அவ னுக்கு மிகவும் வியப்பையளித்தது.

"வசந்தா அரசினர் கல்லூரியில் படிக்கிருள். அவர் தந்தை ராமசந்திர நாயுடு ஒரு ரிடயர்டு என்ஜினியர். காந்தி நகர் மூன்ருவது தெரு வில் அவர்களிருப்பது ஏழாவது வீடு."

யாரும் நம்பக்கூடியவிதத்தில்தான் செய்தி களும் வந்தன. சோமநாத முதலியாரும் சில வதந்திகளைக் கேட்டார். ஆனல் எதைப்பற் றியும் கவலை கொள்ளவில்லை, எதைப்பற்றியும்

பாஸ்கரனோடு பேசுவதுமில்லை. சீக்கிரமாக பெண் பார்க்கவேண்டிய அவசியத்தை யுணர்ந்து அதற்கான வேலைகளில் கவனம் செலுத்த முற்பட்டார்.

வீட்டிற்குள்ளேயே அடைந்து கிடப்பதும் பாஸ்கரனுக்கு வெறுப்பை யளித்தது. முதல் இரண்டு மூன்று நாட்களை எப்படியோ கழித்து விட்டான் தந்தைமேல் கொண்டிருந்த கோபத்தால். இப்போது அவரும் அவனுடன் பேசுவதில்லை. ஆகவே பொழுது செல்வது மிகவும் கஷ்டமாகத் தோன்றியது. வெளியேஎங்காவது சற்று அமைதியான இடத்திற்கு போய்வரலாமே என்று எண்ணினான். தன்மேல் தவறு ஒன்றும் இல்லாதபோது எதற்குத் தான் பயப்படவேண்டும் என்ற உணர்வு அவனுக்கு ஏற்பட்டது. அலங்கோலமாகக் காட்சி யளித்துக் கொண்டிருந்தவன் அலங்காரத்துடன் வெளிக் கிளம்பினான் அன்று மாலை.

மனதில் எங்கு போவது என்பது பற்றி ஒரு முடிவும் இல்லை. பஸ் ஸ்டாண்டில் வந்து நின்று வருகிற ஒவ்வொரு பஸ்ஸையும் பார்த்துக்கொண்டே யிருந்தானே தவிர எங்கு போவது எந்த பஸ்ஸில் ஏறுவது ஒன்றும் புரியவில்லை.

காந்திநகருக்குப் போகும் பஸ் ஒன்று வந்தது. அதைப் பார்த்ததும் வசந்தாவைப் பற்றி அறிந்த செய்தி ஒன்று நினைவுக்கு வந்தது. அது உண்மைதானா என்று பார்த்து வந்தால் என்ன என்று தோன்றியது. பஸ் கிளம்பும் சமயம் ஒரு முடிவுக்கு வந்தவனாக பஸ்ஸில் ஏறி உட்கார்ந்து காந்திநகருக்கு டிக்கட் வாங்கிவிட்டான்.

காந்திநகர், மூன்றாவது தெரு, ஏழாவது வீடு. ஞாபகப்படுத்திக் கொண்டு நடந்தான் பாஸ்கரன். மூன்றாவது தெருவில் நுழைந்து முதல் வீட்டின் நம்பரைப் பார்த்தான். ஒன்று என்று காணப்பட்டது. அதிலிருந்து ஏழாவது வீடு! ஒவ்வொரு வீட்டையும் பார்த்துக் கொண்டே ஏழாவது வீட்டின் முன் வந்து நின்றான். வீடு பெரிய வீடுதான். முன்னே அழகான பூந்தோட்டம் அமைக்கப்பட்டிருந்தது. ஆனால் மற்ற வீடுகளில் இருந்ததைப் போல பெயர்ப் பலகை இல்லை. "இவ்வளவு பெரிய வீட்டை வைத்துக்கொண்டு ஒரு பெயர்ப் பலகை கிடையாது! வீட்டுக்காரன் கொஞ்சம் கஞ்சனாக இருக்கவேண்டும்" என்று நினைத்தான். வீட்டை நன்றாக உற்றுப் பார்த்தான். வீட்டுக் கதவின் ஓரத்தில் ஏதோ பெயர் இருப்பதைப் பார்த்தான். ஆனால் எழுத்துக்கள் விளங்கவில்லை. தன்னை யாராவது கவனிக்கிறார்களா என்று சுற்றிலும் பார்த்தான், ஒருவரும் இல்லை. மெள்ள காம்பவுண்ட் கேட் அருகே வந்து நின்று உற்று நோக்கினான்.

"D. K. ராமச்சந்திர நாயுடு" என்று இருப்பதைக் கண்டு வியப்படைந்தான். வதந்தியைப் பரப்புகிறவர்கள் இந்த மாதிரிச் சில உண்மைகளை சேர்த்து செய்திகளை மெய்யாக்கி விடுகிறார்கள் என்று கருதினான்.

"அப்படியென்றால் வசந்தா என்ற பெண்ணும் இங்கே இருக்கிறாளா? ஒருகால் அவள் தான் கடிதம் எழுதியிருப்பாளோ?"

ஒரு சந்தேகம் பாஸ்கரனுக்கு எழுந்தது. அப்படி யிருக்க முடியாது என்று எண்ணிய வாறு திரும்பும்போது அவன் எதிரே ஒரு பெரியவர் வந்து கொண்டிருந்தார்.

"யாரைப் பார்க்கிறீங்க!" பெரியவர் கேட்டார். பாஸ்கரனுக்கு என்ன சொல்வதென்றே புரியவில்லை. ஏதாவது ஒரு பொய்யைக் கூறி விடலாம் என்று எண்ணினான்.

"ஒன்றுமில்லை இங்கே கேசவம் பிள்ளைன்னு ஒருத்தர் இருக்கிறார் அவர் எந்த வீடுன்னு பார்த்தேன்."

"கேசவம் பிள்ளையா! யாரவர்? என்ன வேலை?"

சமாளித்து விட்டோம் என்று எண்ணிய பாஸ்கரனுக்கு வாய் குழற ஆரம்பித்து விட்டது. "வந்து...வந்து....அவர் எங்களுக்குத் தெரிந்தவர் சேலத்திலிருந்து வந்திருக்கார்."

பெரியவர் ஏதோ சந்தேகத்தோடு பாஸ்கரனைப் பார்த்தார்.

"தம்பி! உன்னைப் பார்த்தா நல்ல பிள்ளை மாதிரித் தெரியுது. ஆனால் உன் பேச்சைக் கேட்டா சந்தேகமாயிருக்கு. ஏன்னா இப்படித் தான் ஒருத்தன் இரண்டு நாளைக்கு முன்னே அந்த மூணாவது வீட்டிலே வந்து ஏதோ விசாரிக்கிறாப் போல உள்ளே நுழைந்து அங்கே யிருந்த வெள்ளி தம்ளரை தூக்கிப் போய்விட்டானாம். நான் கேக்கிறதுக்காக வித்தியாசமா நினைக்காதே. நீ அவ்வளவு நாழியா ஏன் இங்கே நின்று கொண்டே யிருந்தாய்? நான் எதிர் வீட்டிலிருந்து கவனித்துக் கொண்டிருந்தேன்."

"இல்லை சார் தப்பிதமா நினைக்க வேண்டாம். என் பெயர் பாஸ்கரன் என்பதாகும்.

இந்த ஊர் மண்டிக்கடை சேர்மனாத முதலியாரின் மகன் நான்'' என்றான்.

"ஓகோ! சோமநாத முதலியாரின் மகனா? உள்ளே வாப்பா! உங்க அப்பா கிட்டே வேலை பார்க்கிறாரே மானேஜர்..."

"வாசுதேவன்!"

"ஆமாம். அவர்தான். அவர் எனக்கு உறவினர்தான். இப்படி உட்கார் தம்பி!'' என்று பாஸ்கரனிடம் கூறிவிட்டு, "வசந்தா! வசந்தா!'' என்று உள்ளே கூப்பிட்டார்.

வசந்தா! பாஸ்கரனுக்கு பெரிதும் ஆச்சரியமாக இருந்தது. யாரும் பார்த்தால் நம்பிவிடும் விதத்தில் அல்லவா தன்னைப் பற்றி வதந்தியை பரவவிட்டிருக்கிறார்களென எண்ணினான்.

பத்தொன்பது இருபது வயதிருக்கும், ஒரு பெண் வந்து "என்னப்பா!'' என்று கேட்டு நின்றாள். பாஸ்கரனையும் பார்த்தாள். பாஸ்கரன் எதிர்பார்க்கவில்லை அவள் அவ்வளவு அழகுடைய இருப்பாளென்று.

"ஒரு காப்பி போட்டு கொண்டுவாம்மா!''

"இல்லை, வேண்டாம், தாங்ஸ். இப்பதான் சாப்பிட்டுவரேன்''

"பரவாயில்லை தம்பி! வெறுங்காப்பிதானே. போய்க் கொண்டுவாம்மா''

வசந்தா உள்ளே சென்றாள். அவள் போவதைப் பார்த்துக் கொண்டிருந்த பாஸ்கரனை ராமச்சந்திரன் பிள்ளை பார்த்துக்கொண்டு "தம்பி!'' என்று கூப்பிட்டார்.

தன்னைப் பார்த்துக்கொண்டிருந்த நாயுடுவைப் பார்த்து திடுக்கிட்டு, "என்னங்க'' என்று கேட்டான்.

"நீங்க என்ன, இப்ப படிக்கிறீங்களா!''

"ஆமா. பிரசிடென்சி காலேஜில் ஆனர்ஸ் படிக்கிறேன்.''

"ஓகோ! ம்... என்னப்பா செய்றது இந்தப் படிப்புகளை படிச்சு. என் பெண் கூட கவர்ணமெண்ட் காலேஜிலே படிக்கிறா. படிப்பு முடிஞ்சு என்ன செய்றது. உங்களப் போல வங்க கோடிக்கணக்கில் வேலையில்லாமே திண்டாடுறாங்க! இந்த நெருக்கடியில் பெண்களும் படிச்சு என்ன பண்றது. பணத்துக்கு வந்த கேடுதான்!''

பாஸ்கரனுக்கு என்ன கூறுவதென்று தெரியவில்லை. ஒரு அசட்டுச் சிரிப்பை வரவழைத்துக் கொண்டான்.

வசந்தா இரண்டு கோப்பைகளை ஏந்தி வந்து இருவரிடமும் கொடுத்துவிட்டு தந்தையின் பக்கத்தில் போய் நின்றாள்.

காப்பியைக் குடிக்கும் பாவனையில் வசந்தாவின் அழகை நன்றாக ரசிக்க முடிந்தது பாஸ்கரனால். • அவர் மட்டும் இல்லாவிட்டால் கடிதத்தைப்பற்றிய உண்மையை வசந்தாவிடமே கேட்டுத் தெரிந்து கொள்ளலாமே என்று நினைத்தான். வசந்தாவைப் பார்க்கப் பார்க்க "கடிதம் அவளே எழுதி யிருக்கலாமோ'' என்ற சந்தேகம் எழுந்து "எழுதியது அவளாக இருக்கக் கூடாதா'' என்ற ஏக்கத்திற்கு இழுத்துச் சென்றது அவனுடைய எண்ணங்கள். இவ்வித எண்ண அலைகளுக்கு அணை போடும் விதமாக நாயுடுவின் பேச்சு ஆரம்பமாகியது.

"ஏன் தம்பி! கேசவம் பிள்ளையின்னு சொன்னியே அப்படி யாரும் இங்கில்லையே! நான் இங்கு குடியேறி இருபத்தஞ்சு வருஷமாச்சு, எனக்குத் தெரியாதவங்களே இங்கு கிடையாது''

"ஆனால் அவர் இப்பதான் இந்த ஊருக்கு வந்திருக்கார். தெருப்பேர்தான் ஞாபகம் இருக்கு வீட்டு நம்பர்தான் மறந்துபோச்சு. பரவாயில்லை! அவரைப் பிறகு பார்த்துக் கொள்கிறேன். நாழியாகிறது. நான் வருகிறேன். ரொம்ப தாங்ஸ்!'' என்று வசந்தாவையும் பார்த்துத் துணிச்சலோடு எழுந்தான்.

"சரி தம்பி! அப்பாவைக் கேட்டதாச் சொல்லு! அவரைப் பார்த்தே பல வருஷங்களாச்சு.''

அப்பொழுதுதான் நாயுடு அப்பாவுக்குத் தெரிந்தவர் என்று பாஸ்கரனுக்குத் தெரிய வந்தது. "சரிங்க! நான் வரேன்'' என்று கூறி விடைபெற்றுக்கொண்டான்.

பாஸ்கரன் சென்றதும் காப்பி குடித்த கோப்பைகளை கையில் எடுத்துக்கொண்டு "அப்பா! இவர் காலேஜ் நாடகங்களில் நடிப்பார், நல்லா பேசுவார். போன வருஷம் எங்க காலேஜில் நடந்த நாடகப் போட்டியிலும், பேச்சுப் போட்டியிலும் இவருக்குத்தான் பிரைஸ் கிடைச்சுது'' என்று கூறினாள்

"அப்படியா! பணக்கார வீட்டுப் பிள்ளைகள் இந்த மாதிரியிருப்பது அபூர்வந்தான். ஆனால் மேடை ஏறிப் பேசும் பையன் ஏன் நம்ம கிட்ட தொடை நடுக்கத்தோடே குழறிக் குழறிப் பேசறான்''

"அதுதானப்பா, எனக்கும் தெரியலை''

"சரி அது போவுது! இன்றையப் பேப்பரைக் கொண்டுவா'' என்று சொன்னார் நாயுடு. உள்ளே சென்றாள் வசந்தா.

வசந்தா, அழகோவியமாகத் தோன்றி தன்னை வரவேற்பது, அன்பொழுகப் பேசுவது, அவனைப் பஸ்ஸில், கடற்கரையில் சினிமாக் கொட்டகையில் சந்தித்து மகிழ்வது—பாஸ்கரன் பலவித கனவுகள் கண்டான், அன்றிரவு.

(35-ம் பக்கம் பார்க்க)

பொய் தந்த பலன்

[எழினி]

ஓங்கி வளர்ந்து நீண்டு பரந்த பெருமலை! அதனை அடுத்து, மரங்களும், குன்றுகளும் அடர்ந்த பெருங் காடு! குன்றுகளிலெல்லாம் நெருங்கி வளர்ந்த மூங்கிற் புத்துக்கள்! அவற்றினூடே கற்பாறைகளிடையே ஏறி இறங்கி வளைந்து செல்லும் சிறிய வழி! அந்த வழியில் இரைதேடி ஓயாமல் நடமாடும் வேங்கை, வேழம், கரடி, காட்டெருமை போன்ற கொடிய விலங்குகள்! இத்தகைய கொடுமைகள் நிறைந்த காட்டைத்தான், இரவு நேரத்தில், தலைவியைத் தனியே காணுவதற்கான இடமாகத் தலைவன் தேர்ந்தெடுத்திருக்கிறான்.

தலைவன்மீது கொண்டிருக்கும் மட்டற்ற காதலன்பின் காரணமாகக் காட்டின் கொடுமையையும், இரவுநேரத்தின் கடுமையையும்பற்றிக் கவலைப்படாமல், தலைவி, தலைவனின் களவொழுக்கத்திற்கு இடமளித்து வருகிறாள். தலைவியின் விருப்பத்தை நிறைவேற்றிவைப்பதைத் தன் கடமையாகக் கொண்டுள்ள தோழி தலைவியை நாள்தோறும் இரவுக்குறி இடத்திற்கு அழைத்துச் செல்ல வேண்டியவளாக இருக்கிறாள். ஊரார்க்கும், உற்றார்க்கும் தெரியாமல், வேங்கை முதலிய காட்டு விலங்குகளுக்கு அஞ்சி அஞ்சி, நள்ளிரவில், கற்பாறையாகிய சிறிய வழியிலே நாள்தோறும் செல்லு தலைவிக்கும் தோழிக்கும் மிக்க வருத்தத்தைத் தருகிறது.

களவொழுக்கத்தில் பெரும் இன்பம் கழிபேரின்பமாக இருப்பதால், களவொழுக்கத்தை நீடிக்க வைப்பதிலே கண்ணுங்கருத்துமாக இருக்கிறான் தலைவன். விரைவில் திருமணம் நடந்தேறினால் இரவுக்குறிக் கொடுமைகள் அனைத்தும் களையப்படும் என்றும், தம் வருத்தம் எவ்வளவோ நீங்கிவிடும் என்றும் தோழி தலைவனிடம் அடிக்கடிச் சொல்லிப் பார்க்கிறாள். தலைவன் ஏதேதோ சாக்குப் போக்குச் சொல்லித் திருமணத்தை ஏற்றிப் போட்டுக்கொண்டே இருக்கிறான்.

தலைவன் தலைவியைக் காணும்போதெல்லாம் அவளை ஆரத்தழுவி, உச்சி மோந்து, முத்தமிட்டு, ஆடிப்பாடி மகிழ்ந்திருப்பது வழக்கம். ஒருநாள் இரவு அந்தப் பூங்கொடியாள், அந்தக் கட்டிளங்காளையோடு நீண்ட நேரம் ஆடிப் பாடிக் கூடிக்குலாவி யிருந்துவிட்டுப் பொழுது விடிவதற்குள், தாய் தந்தையர் அறியாவண்ணம் மனையகம் புகுந்து, தன் படுக்கையில் படுத்துக்கொள்கிறாள். தோழியும் வழக்கம் போல் அவள் பக்கத்தில் படுத்துக்கொள்கிறாள்.

பொழுது புலர்கிறது. தாய் எழுந்து சுற்றுமுற்றும் பார்க்கிறாள். மகளும் தோழியும் அயர்ந்து உறங்குவதைக் காண்கிறாள். பின்னர் முறைப்படி வீட்டு வேலைகளைப் பார்க்கத் தொடங்குகிறாள். வழக்கத்திற்கு மாறாகத் தலைவியும் தோழியும் சற்றுநேரங் கழித்துப் படுக்கையை விட்டு எழுந்து வருகிறார்கள். மகள் மிகவும் சோர்வுற்றுத் தள்ளாடித் தள்ளாடி நடந்துவருவதைத் தாய் கவனிக்கிறாள். மகளின் உடல் நலத்திற்கு என்னமோ, ஏதோ என்று அச்சப்பட்டுக்கொண்டு, தாய் அவளை உற்றுநோக்குகிறாள். மகளின் தோள், முகம், மார்பு ஆகியவற்றைச் சுற்றி ஏராளமான வண்டுகள் மொய்ப்பதைப் பார்க்கிறாள். வண்டுகள் மொய்க்கும் அளவுக்கு என்றுமில்லாத புது மணம் ஏதோ அவள் உடலில் சேர்ந்திருக்கவேண்டும் என்று எண்ணுகிறாள். மகளின் உடல் சோர்வையும், அவளை வண்டுகள் மொய்க்கும் தன்மையையும் கண்டு, அவள் யாரேனும் ஆடவருடன் களவொழுக்கம் கொண்டிருப்பாளோ என்று தாய் ஐயுறுகிறாள். தாய்க்குச் சினம் பொங்குகிறது; ஆனால் விளக்கத்தை மகளிடம் எப்படி வெளிப்படையாகக் கேட்பது என்று தோன்றாமல் சிறிது நேரம் திகைத்து நிற்கிறாள்.

"என்னடீ உடம்புக்கு? ஏனடீ தள்ளாடி நடக்கிறாய்?" என்று தாய் கடுமையான குரலில் மகளைப் பார்த்துக் கேட்கிறாள்.

அரைத் தூக்கத்தில் நடந்துகொண்டு வந்த தலைவி, தாயின் கடுங்குரல் கேட்டுத் திடுக்கிட்டு, விழித்து நோக்கி நிற்கிறாள்.

"ஏனடி, வண்டுகள் உன்னை மொய்க்கின்றன?" என்று தாய் அதட்டிக் கேட்கிறாள்.

அப்பொழுதுதான் தன்னைச் சுற்றி வண்டுகள் மொய்க்கின்றன என்பதை ஒரு முறைத் தன் தோளையும், மார்பையும் பார்த்துத் தெரிந்து கொள்கிறாள். முன்னாள் இரவில் தலைவனோடு முயங்கிக் கிடந்ததால், அவனது மாலையிலிருந்தமணமும், அவன் உடலில் பூசியிருந்த சந்தனம் முதலிய நறுமணப் பொருள்களும் தன் தோளிலும், மார்பிலும், முகத்திலும் பட்டுவிட்டன. அதனால்தான் வண்டுகள் தன்னை மொய்க்கின்றன என்பதை உணர்ந்து கொள்கிறாள். தாயின் கேள்விக்கு என்ன விடை கூறுவது என்று தெரியாமல் அச்சத்துடனும், நடுக்கத்துடனும் திருதிரு என்று விழித்துக்கொண்டிருக்கிறாள் தலைவி.

மகளிடமிருந்து என்ன விடை வருகிறது என்பதைப்பற்றி அறிந்துகொள்ள இடமளிக்காமல், "இதற்கு முன்பும் உன்னுடைய தோள்களை வண்டுகள் இப்படி மொய்த்துக் கிடந்தனவா?" என்று மேலும் வினவத் தொடங்குகிறாள்.

தாயின் வினவிற்கு என்ன விடை கூறுவது என்று தெரியாமல், திகைத்துத் தன் தோழியை வருத்தத்தோடு பார்க்கிறாள். தலைவியின் முகத்தைப் பார்த்த தோழி தலைவியின் நிலைமையை நன்றாகப் புரிந்துகொள்கிறாள். தலைவி அன்னையிட மிருந்து தப்பித்துக்கொள்ளும் வழிகாணாது தவிக்கிறாள், எனவேதான் வருத்தத்துடன் தன்னை நோக்குகிறாள் என்பதைத் தோழி அறிந்துகொள்கிறாள்.

தாய்க்கு என்ன மறுமொழி கூறலாம் என்பது பற்றிச் சிந்திக்கிறாள். திடீரென்று ஒரு நினைவு அவளுக்கு ஏற்படுகிறது. உடனே தோழி அடுப்பில் எரிந்துகொண்டிருந்த சந்தன விறகின் கொள்ளியை எடுத்து, அதனைத் தாயிடம் காட்டி, "இந்தச் சந்தன விறகு, அடுப்பில் வைக்கப்பட்டுவிட்டதால், இதில் மொய்த்துக்கிடந்த வண்டுகள், மொய்ப்பதற்கு வேறுபொருள் கிடைக்கப் பெறாமல், இயற்கை மணம் கமழும் இவளது தோள்களை என்றுமில்லாத வகையில் இன்று மொய்க்கத் தொடங்கின! வண்டுகள் மொய்ப்பதற்கு வேறு எதுவும் காரணமில்லை!" என்று கூறுகிறாள். தோழியின் கூற்று உண்மையாக இருக்கக் கூடும் என்று கருதிக்கொண்டு தாய் அப்பால் செல்லுகிறாள். எப்படியோ பொய் சொல்லித் தப்பித்தோம் பிழைத்தோம் என்று தோழியும் தலைவியும் அகமகிழ்ச்சி கொள்கிறார்கள்.

தாயிடம் எவ்வளவு நாட்களுக்குத்தான் இப்படியே பொய் சொல்லித் தப்பிப்பது என்பது பற்றித் தலைவி மிகக் கவலையுறுகிறாள். களவொழுக்கத்தை நீடிக்காது, விரைவில் திருமணம் செய்துகொள்ளும்படித் தலைவனை வற்புறுத்த, இரவுக் குறிக்குத் தலைவி செல்லாமல் இருப்பதுதான் ஏற்றது என்ற முடிவுக்குத் தோழி வருகிறாள். தலைவியும் தோழியின் கருத்துக்கு உடன்பட்டு அன்று இரவுக் குறியிடத்துக்குப் போகாமல் நின்றுவிடுகிறாள்.

தலைவன் தலைவியைக் காணும் ஆவலோடு இரவுக் குறியிடமாகிய அக் காடு நோக்கி வருகிறான். எப்பொழுதும் முன்கூட்டியே வந்து காத்திருக்கும் தலைவியையும், தோழியையும் அன்று காணாமல் திகைக்கிறான். அங்குமிங்கும் ஓடியாடித் தேடிப் பார்க்கிறான். அவர்கள் அவன் கண்ணில் தட்டுப்படவில்லை. ஏதேனும் காட்டு விலங்கு அவர்களைக் கொன்றிருக்குமோ அல்லது அவர்கள் வழி தவறி வேறு எங்கேனும் போய் இருப்பார்களோ என்ற அச்சத்துடன் அலைந்து திரிந்து பார்க்கிறான். பிறகு நெடுநேரமாகியும் காதலியைக் காண முடியவில்லையே என்ற வருத்தத்துடன் தன் இருப்பிடம் நோக்கித் திரும்புகிறான்.

மறுநாள் பகற்பொழுதில், தலைவியின் வீட்டார் தலைவியை வெளியேற வொட்டாமல் தடுத்து நிறுத்தியிருக்கிறார்களோ என்ற ஐயப்பாட்டுடன், அந்த உண்மையையும் தெரிந்து கொள்ளலாம் என்ற எண்ணத்தோடு தலைவியின் வீடு நோக்கிச் செல்கிறான். தலைவியின் வீட்டருகில் மறைவான ஒரு இடத்தில் தோழியை எதிர்ப்படுகிறான். தலைவன், முதல்நாள் இரவு காட்டிடத்தே, தான் நெடுநேரம் வரையில் காத்திருந்து, அலைந்து திரிந்து அடைந்த துன்பத்தைத் தெரிவிக்கிறான். தோழி, தானும் தலைவியும் நாள்தோறும் அடையும் துன்பத்தை எடுத்துக் கூறி, முதல் நாள் தலைவியின் தோள்களை வுண்டுகள் மொய்த்ததையும் அதனை அன்னை பார்த்துவிட்டதையும், என்ன காரணம் பற்றி வண்டுகள் அப்படி மொய்க்கின்றன, இதற்கு முன்பும் வண்டுகள் அப்படி மொய்த்துக் கிடந்தனவா என்று அன்னை வினவியதையும், அது கேட்டுத் தலைவி திகைத்துத் திக்குமுக்காடி, என்ன விடையிறுப்பது என்று தெரியாமல் தன்னை அவள் நோக்கியதையும், தான் சந்தனக் கொள்ளிக்கட்டையைக் காட்டி அதிலிருந்த வண்டுகள் தாம் தலைவியின் தோள்களில் பாய்ந்தன என்று சொல்லியதையும், அதனை உண்மை என்று நம்பி தாய் அகன்றதையும்

சொல்லி தங்களுடைய நிலைமையை விளக்குகிறாள்.

தோழி சொல்லுவதைக் கேட்டுக்கொண்டிருந்த தலைவன், "நீங்கள் எப்படியும் இரவுக் குறியிடத்து வந்திருக்கலாமே!" என்று கூறுகிறான்.

"எப்படி வரமுடியும்?" என்று தோழி கேட்கிறாள்.

"ஏன் வரமுடியாது?"

"வந்துவிட்டு மறுநாள் காலையில் அன்னைக்கு யார் விடையிறுப்பது?"

"நேற்று சொல்லியதுமாதிரி ஏதேனும் ஒரு பொய் சொல்லித் தப்பித்துக்கொள்வது!"

"எவ்வளவு நாட்களுக்குத்தான் நாங்கள் பொய் சொல்ல முடியும்? நாங்கள்தான் நாள்தோறும் ஒவ்வொரு பொய் சொல்லிக்கொண்டு வருகிறோமே!"

"அப்படியே இன்னும் சில நாட்களுக்குச் சொல்லிப் பார்ப்பதுதானே!"

"சொல்லிப் பார்க்கலாம்! ஆனால் அன்னை அதற்குள் உண்மையை அறிந்துகொண்டு தலைவியைக் காவலில் வைத்துவிடுவார்கள். பிறகு அவளைப் பார்க்கவும் முடியாது; அவளை அடையவும் முடியாது. தாய் உனது களவொழுக்கத்தை அறிந்து கொண்டுவிட்டால் பிறகு உனக்கு அவளை மணம் முடித்துவைக்க ஒருப்படவே மாட்டார்கள்!"

"நானே திருமணம் செய்துகொள்ள முன் வந்தால்:......"

"பிறகு வேறு யாருக்கேனும் மணம் முடித்துவைக்க முனைவார்களே ஒழிய, உனக்கு முடித்துவைக்க முன்வரமாட்டார்கள்!"

"அவளை நான் திருமணம் செய்துகொள்ளாமல், வேறு எவரும் திருமணம் செய்துகொள்ள நான் விடப்போவதில்லை!"

"அந்த உணர்வு உனக்கு உண்டு என்றால், களவொழுக்கத்தைப் பற்றி எண்ணாமல், திருமணத்திற்கான ஏற்பாடுகளை உடனே செய்!"

"அப்படியானால் இப்பொழுதே புறப்படுகிறேன். திருமணத்திற்கான ஏற்பாடுகளுடன் திரும்புகிறேன். அஞ்சவேண்டாம் என்று தலைவியிடத்தில் சொல்!" என்று சொல்லிவிட்டுத் தலைவன் அவ்விடம் விட்டு நீங்குகிறான்.

தலைவன் திருமணத்திற்கான ஏற்பாடுகளுடன் திரும்பிவருவான் என்ற உவகையோடு தோழி தலைவியிடத்தில் சென்று செய்தியை அறிவிக்கிறாள். தலைவியும் செய்தி கேட்டு மகிழ்ச்சியடைகிறாள்.

ஃ ஃ ஃ

இது நற்றிணை 55ஆம் செய்யுளின் உட்கருத்தை அடிப்படையாகக்கொண்டு எழுந்த சொல்லோவியமாகும். திருமணம் செய்துகொள்ளுவதை நீடிக்காது, விரைவில் திருமணம் செய்துகொள்ளும்படி தோழி தலைவனுக்குக் கூறுவதாக அமைந்துள்ள குறிஞ்சித் திணையின்பாற்பட்ட செய்யுளாகும் இது. இதனை இயற்றியவர் பெருவழுதி என்பவராவார். இவர் பெரும்புலவராக மட்டுமல்லாமல், பாண்டிய நாட்டை ஆண்ட பெருமன்னராகவும் திகழ்ந்திருக்கிறார். இவர் கடலுண்மாய்ந்த இளம் பெருவழுதி எனவும், இளம்பெருவழுதி எனவும் கூறப்படுவார். இவர் கடலிடத்துச் சென்றபோது, அதில் இறந்து பட்டமையால் கடலுண்மாய்ந்த வழுதி என அழைக்கப்பட்டார். இவர் பாடிய பாட்டுக்கள் நற்றிணை, பரிபாடல், புறநானூறு ஆகிய நூல்களில் காணக்கிடக்கின்றன. இவர் குறிஞ்சித் திணையைப் பற்றியும், பாலைத் திணையைப்பற்றியும் நயமாகப் பாடியுள்ளார்.

ஓங்குமலை நாட ஒழிகநின் வாய்மை
காம்புதலை மணந்த கல்லதர்ச் சிறுநெறி
உறுபகை பேணாது இரவின் வந்திவள்
பொறிகிளர் ஆகம் புல்லத் தோள்சேர்பு
அறுகாற் பறவை அளவில மொய்த்தலிற்
கண்கோ ளாக நோக்கிப் பண்டும்
இனையை யோவென வினவினள் யாயே
அதனெதிர் சொல்லா ளாகி அல்லாந்து
என்முக நோக்கி யோளே அன்னாய்
யாங்குணர்ந் துய்குவள் கொல்லென மடுத்த
சாந்தம் ஞெகிழி காட்டி
ஈந்தா யினளால் என்றிசின் யானே. (நற்றிணை—55)

[பொழிப்புரை:- ஓங்கிய மலைநாடனே! நீ கூறும் உண்மைகளெல்லாம் இப்படியே பொய்த்தொழிவனவாக; மூங்கில்கள் நெருங்கிய கற்பாறை நெறியாகிய சிறிய வழியில்

இரைதேடி உழலுகின்ற வேங்கை முதலாய மிக்கப் பகையைப் பொருட்படுத்தாது, இரவிலே வந்து இவளது அழகு விளங்கிய மார்பை ஆரத்தழுவி மகிழ, அதனுலுண்டாகிய புது மணத்தைக் கருதி இவளது தோள்களைச் சார்ந்து வண்டுகள் அளவில்லாதவன வாய் மொய்த்தலினுலே, எம் அன்னை தன் கண்களாலே கொல்லுபவள் போல நோக்கி, 'நீ இதற்கு முன்னும் இப்படி வண்டுகளால் மொய்க்கப் பெற்ற தோளினையுடையையோ' என்று வினவினுள்; அங்ஙனம் வினவலும் இவள் அதற்கு எதிர்மொழி அறியாளாய் வருத்தமுற்று என் முகத்தை நோக்கி நின்ருள்; அதனையறிந்த யான் 'இவள் எப்படி ஆராய்ந்து மறைத்துக் கூறிப் பிழைப்பாள்' என்று எண்ணி, அன்னையை நோக்கி அடுப்பி லிட்ட சந்தன விறகின் கொள்ளியை எடுத்துக் காட்டி, அன்னுய்! இவ்விறகினை அடுப்பிலிடுத லும் இதிலுள்ள வண்டுகள் இவளுடைய தோளில் மொய்க்கின்றன காண் என் மறைத்துக் கூறினேன்; இங்ஙனம் எத்துணைநாள் நீ வரைந்து கொள்ளுதல் காரணமாகப் பொய் கூறி உய்விப்பது?

காம்பு - மூங்கில்; அதர் - வழி; ஆகம் - மார்பு; அறுகாற்பறவை - வண்டு; அல்லாந்து - வருத்தமுற்று; எருகிழி - கொள்ளி; கோள் - கொலை; வாய்மை-இகழ்ச்சிக்குறிப்பு.]

* * *

களவொழுக்கத்தில் ஈடுபடும் தலைவிக்கு ஏற்படும் இடையூறுகளும், அவற்றினின்றும் தப்பிக்கத் தலைவி கையாளும் சூழ்ச்சிகளும், முயற்சிகளும், விரைவில் திருமணம் செய்துகொள்ளும்படி தலைவனை வற்புறுத்த தோழி எடுக்கும் முறைகளும் இச்செய்யுளில் தெளிவுபடவும், நயம்படவும் விளக்கிக் காட்டப்பட்டுள்ளன.

களவொழுக்கத்தில் ஈடுபட்டிருக்கும் தலைவன் தலைவியை ஆரத்தழுவி அணைத்திருத்தல் என்பது பண்டைத் தமிழர்க்கு உடன்பட்ட ஒரு பண்பாடு என்றே தெரியவருகிறது. மேனுடுகளில் இதுநாளில் சிறப்பித்துச் சொல்லப்படும் அந்தப் பழக்கம் பண்டைத் தமிழகத்துக்கு ஏற்புடைத்தான ஒன்று என்றே தோன்றுகிறது.

தலைவியின் தோற்றங் கண்டு, அவள் களவொழுக்கத்தில் ஈடுபட்டிருக்கக்கூடும் என்று ஐயுற்ற காரணத்தால்தான் "இதற்கு முன்பும் வண்டுகள் உன் தோள்களை மொய்த்ததுண்டா?" என்று தாய் கேட்கிருள். இது மிகவும் நயப்பாடு நிறைந்த கூற்ருகும்.

அடுப்பில் எரிந்து கொண்டிருந்த சந்தனக் கொள்ளியை எடுத்துக்காட்டி, அதில் மொய்த்துக் கிடந்த வண்டுகள்தாம் தலைவியின் தோளில் பாய்ந்தன என்று ஏற்றவாறு பொய் சொல்லித் தலைவியைத் தப்புவிக்கத் தோழி கையாண்ட முறை நினைந்து நினைந்து மகிழ்வதற்குரியதாகும்.

பேசும் மலர்

மலர்கள் கண்ணிற்கு இன்பம் பயப்பனவே யன்றிக் காதிற்கு இன்பம் பயப்பனவல்ல. இதுவே உண்மையாயினும், படகோனியாவிலுள்ள **ஹபஃப்ளோர்** என்ற ஒரு வகை மலர் தன்னுடைய மழலைப் பேச்சினல் இன்பம் பயப்பதாகக் கூறப்படுகிறது. அம்மலர் பொழுது விடியுங்காலை தொடங்கி மாலை வரையில் "கொல கொல" வென்று பேசிக் கொண்டிருக்கிறதாம். அதனைக் கேட்டவர்கள் அவ்வொலி பலர் பேசுவது போலிருக்கிறதென்று கூறுகின்றனர். அவ்வூர் மக்கள் அம்மல ன் பேச்சுகளிற் சிலவற்றின் பொருளைத் தாங்கள் தெரிந்து கொள்ளக்கூடு ம என்று கூறிக் கொள்கின்றனர்.

அம்மலரின் பொருத்துவாயான ஆர் (Calyx) அம்மலரின் இதழ்களோடு உராய்வதால் விந்தையான இவ்வொலி உண்டாகிறதென்று ஆராய்ச்சியாளர் கூறுகின்றனர்.

இம்மலர் தென்னமெரிக்காவிலுள்ள ஆண்டீஸ் மலையடிவாரத்தில் ஏராளமாகப் பூக்கிறதாம்.

★ இசை வல்லுநர் மொசார்த் ★

இரா. செழியன்

(சென்ற இதழ் தொடர்ச்சி)

ஐந்து ஆண்டுகள் — மொசார்த்தின் ஆறுவது வயதிலிருந்து பத்தாவது ஆண்டு முடிவு வரை ஐரோப்பா சுற்றுப் பிரயாணம் நடைபெற்றன. காலத்தை போட்டியிட்டுக் கொண்டு, மொசார்த்தின் இசைப் புலமை வளர்ந்தபடி இருந்தது. ஐரோப்பா முதல் சுற்றுப் பயணம் முடிந்ததும், மொசார்த் குடும்பம் மீண்டும் வியன்னாவுக்கு வந்தார்கள்.

ஐந்தாண்டுகளுக்கு முன்பு விட்டுப் போன தலைநகருக்கும், இப்பொழுது அவர்கள் முன் காணப்பட்ட வியன்னாவுக்கும் பலத்த மாறுதல் இருந்தது. அங்கு அம்மை நோய் பரவி, பெரும்பாலோர்—முக்கியமாக இசையை ஆதரிக்க வல்ல பிரபுக் குடும்பத்தினர் வெளியேறி விட்டனர், நோயின் கொடுமையால் ஊர் மக்கள் அமைதியிழந்திருந்ததுடன், அரண்மனையும் மூடிக் கிடந்தது. இசை கேட்டு இன்புறுவதற்கானச் சூழ்நிலை போய்விட்டது. வியன்னாவை விட்டு மொசார்த் குடும்பத்தினர் தம் சிற்றூருக்குச் சென்றார்கள். ஆனால் வியன்னாவைப் பிடித்திருந்த அம்மை நோய் அந்தக் குடும்பத்தைப் பின்பற்றிக்கொண்டு வந்தது. மொசார்த்தும், அவன் அக்கா மேரியாவும் அம்மை நோய்வாய்பட்டனர். மூன்று நான்கு மாதங்கள் இளைப்பாறவேண்டிய அவசியம் வந்தது.

1768 சனவரி மாதம் லியோபால்டு தம் மகனை அழைத்துக்கொண்டு வியன்னாவுக்குத் திரும்பினார். சிறுவன் மொசார்த் முதலில் வியன்னாவில் அடைந்த புகழ் குறையாதிருந்த போதிலும், அதைமட்டும் வைத்து ஒன்றும் செய்யமுடியாது என்பதைத் தந்தை உணர்ந்தார். சிறுவன் ஒருவன் இசைக்கருவியை பிழையற மீட்டுவது, முதலில் அச்சரியத்தை அளித்தாலும் பின்பு சலித்துவிடலாம். அதனால் வழக்கமாக இசைப்புலமையுடையவர்களைப் போல, மொசார்த்தும் தன் திறமையை மேற்கொண்டு வெளிப்படுத்த வேண்டும் என லியோபால்டு திட்டமிட்டார்: அந்தக் காலத்தில், இசை நாடகங்கள் பெரிதும் முன்வர ஆரம்பித்தன. அந்த வகையில், சிறு நாடக மொன்றைத் தேர்ந்தெடுத்து, அதற்கு இசையமைக்கும் வேலையில் சிறுவன் மொசார்த் ஈடுபடுத்தப் பட்டான். மொசார்த் இசை நாடகம் எழுதி முடிந்ததும், அது வியன்னாவில் இருந்த நாடக கொட்டகையில் நடத்தப்படுவதாக ஏற்பாடு செய்யப்பட்டது. அதில் பங்கு கொள்ளும் நடிகர்களும், நாடகத்தின் இசை நுணுக்கங் கண்டு வியந்தனர். அவர்கள், மற்ற புகழ் பெற்ற இசை வல்லுநர்களின் இசை நாடகங்களில் கலந்து அனுபவம் பெற்றவர்கள். எனவே அவர்களின் பாராட்டுதலுக்கு மதிப்பு இருந்தது. தனது முதல் இசை நாடகத்தைச் செய்து முடித்தபொழுது, மொசார்த்துக்கு வயது பன்னிரண்டு! எழுதப்பட்ட இசை, ஐநூற்று ஐம்பத்தெட்டு பக்கங்களை அடைத்ததாம்!

இந்தப் போழ்தில், மொசார்த்தின் இசை நாடகத்துக்கு எதிர்ப்பு கிளம்ப ஆரம்பித்தது. வியன்னாவில் இருந்த "பழம் பெருச்சாளிகள்" சிறுவனை மொசார்த்தை ஏற்றுக்கொள்ள மறுத்தனர். "பன்னிரண்டு வயதுச் சிறுவன் இசை நாடகம் எழுதுவதாம்! அதை வியன்னாவில் நடிப்பதாம்!" என்று அவர்கள் ஒதுக்கித் தள்ளினார்கள். வயதும் அனுபவமும் முதிர்ந்தால்தான் இசை நாடகங்கள் எழுதும் பக்குவம் இருக்கும் என்பது அவர்களுடைய கொள்கை. அவர்களது எதிர்ப்பு, நாடகத்தை நடத்துவதற்குத் தடையாக ஆரம்பித்தது. மொசார்த் நாடகத்தில் குறைகாண நினைத்தவர்கள், "பாட்டில் வரும் சொற்களுக்கு, சிறுவன் அமைத்துள்ள இசை பொருத்தமில்லாதிருக்கிறது" என்று முதலில் சொல்ல ஆரம்பித்தார்கள். முழுவதும் இசையாலான அந்த நாடகம், இத்தாலி மொழியில் எழுதப்பட்ட

தாகும். அதனால் வேற்று மொழியைத் தாய் மொழியாகக் கொண்ட, மொசார்த்துக்கு, இத்தாலிப் பாடல்கள் முழுவதும் புரிந்திருக்க முடியாது என்பது குறை கூறுவோரின் எண்ணம். ஆனால் அந்த எதிர்ப்பை அடக்க, தந்தை லியோபால்டு இத்தாலி நாட்டு இசையில் வல்லுநர்களும், இசை நாடகங்கள் அமைப்பதில் புகழ் பெற்றவர்களுமான மெத்தா தாசியே, ஆசே, என்ற இருவரின் உதவியை நாடினார். மொசார்த் அமைத்த இசையைப் பார்த்த அவர்கள், தங்கள் முழுமனதான பாராட்டுதலைத் தெரிவித்தார்கள். அத்துடன் மொசார்த்தின் இசைநாடகத்தின்மீது எழுந்த முதற் குற்றச்சாட்டு பலம் இழந்தது.

குறை கூறவந்தவர்கள் புதிதாக ஒரு புகாரைக் கிளப்பினார்கள். அது "மொசார்த் மிகச் சிறு வயதினன். அவன் இந்த இசை நாடகத்தை எழுதவில்லை. வேறு யாரோ அமைத்துக் கொடுத்து மொசார்த் பெயரில் வெளியிடுகிறார்கள்" என்பதாகும். இந்தப் புகாரும் விரைவில் உடைக்கப்பட்டது. இசை வல்லுநர்கள் கூடியிருந்த ஒரு அவை முன் மொசார்த் கொண்டு வரப்பட்டான். இசை நாடகத்திலிருந்து, மூன்றாவது மனிதரொருவரால் எதேச்சையாக ஒரு பக்கம் புரட்டப்பட்டு, சிறுவனிடம் தரப்பட்டது. மொசார்த் எவ்விதத் தயக்கமுமின்றி அதை வாசித்துக் காட்டினான். அதற்குப் பின் வேறொரு பாடல் அவனுக்குத் தரப்பட்டது. கூடியிருப்போர் முன்னிலையில் மொசார்த் அந்தப் பாடலுக்கு இசையமைத்துக் காட்டினான். சிறுவனின் இசைப் புலமை கண்டு கூடியிருந்தவர்கள் மகிழ்ந்தார்கள்.

மொசார்த்துக்கு ஏற்பட்ட எதிர்ப்பு அத்துடன் நிற்கவில்லை. நேரிடையான தாக்குதல் வெற்றியடையவில்லை யென்றதும் வேறு பக்கம் திரும்பியது. மொசார்த்தின் இசை நாடகத்தை வெளியிடவிருந்த நாடகக்காரனை — அவன் பெயர் அப்லிசியோ என்பதாகும் — எதிர்ப்பாளர்கள் தம் பக்கம் சேர்த்துக்கொண்டனர். நாடகத்துக்கு செய்த ஏற்பாடுகள் மெதுவடைந்தன. மார்ச் மாதக் கடைசியில் குறிக்கப்பட்ட நாள் மே மாதத்துக்குத் தள்ளப்பட்டது. மே மாதம் வந்துங்கூட, நாடகம் அரங்கேற்றப் படவில்லை. நாடகக் கொட்டகைக்காரன், "சக்கரவர்த்தி வியன்னா திரும்பியதும் நாடகத் தேதி குறிக்கலாம்" என்று சொன்னான். லியோபால்டுக்கு ஒன்றும் புரியவில்லை. மொசார்த் எழுதிய நாடகத்தை ஒதுக்கி வைத்துவிட்டு, புதிய நாடகங்களுக்கான ஒத்திகைகள் கொட்டகையில் நடைபெற்றுக் கொண்டிருந்தன. நடிகர்களைக் கேட்டால் அப்லிசியோவின் உத்தரவு என்று வாயடைத்து நின்றார்கள், அப்லிசியோவைக் கேட்டால், ஏதாவது சாக்குப் போக்குகள் சொல்லிக் கொண்டிருந்தான். லியோபால்டு அவனை விடுவதாயில்லை. கடைசியாக ஒரு நாள் மிகக் கண்டிப்புடன் கேட்டார். அப்லிசியோவுக்குக் கோபம் உண்டாகியது. மொசார்த்தின் இசை நாடகம் அரங்கேற்றப்பட்டால் நானே முன்னால் நின்று குழப்பம் விளைவித்துக் கலைத்து விடுவேன்" என்று அவன் வெளியிட்டான். லியோபால்டு ஒரு மனு எழுதி சக்கரவர்த்தி முன் வைத்தார். ஆனால் சக்கரவர்த்தி ஏதும் செய்ய முடியாமலிருந்தார். ஏனென்றால் அப்லிசியோவே பெரிய கடன்களில் சிக்கி, சக்கரவர்த்தியிடம் உதவி கோரியிருந்தான். இப்பொழுது மொசார்த்தின் நாடகத்தை அரங்கேற்றச் சொன்னால், பண உதவி கேட்டுத் தொல்லை கொடுப்பான், லியோபால்டு சக்கரவர்த்தியிடம் போவார் என்று எதிர்பார்த்துதான், அப்லிசியோ தவக்கம் செய்து வந்தான். அவனுக்கு மேற்கொண்டு எந்த உதவியும் அளிப்பதில்லையென முடிவு செய்திருந்ததால், சக்கரவர்த்தி மொசார்த் பொருட்டு அவனைக் கூப்பிடவில்லை. இவ்வாறாக, மொசார்த் எழுதிய முதல் இசை நாடகம் குறித்த காலத்தில் அரங்கேற்றப்படாமல் போயிற்று. மொசார்த்துக்கு எதிராகச் சதி செய்த அப்லிசியோ நெடுநாள் நன்றாக வாழ்ந்தானில்லை. அவன் நல்ல மனிதனுமல்ல, ஏமாற்று சூதுவாதுகளில் சிறிது நாட்கள்தான் காலம் கடத்த முடியும். கடைசியாக, பொய்க் கையெழுத்திட்ட குற்றத்தில், அகப்பட்டு, தூக்குமேடையில் அவன் தன் உயிரை இழந்தான்!

மொசார்த்தின் புகழை, சதித் திட்டங்கள் வெகு நாட்கள் தடுத்து வைக்க முடியவில்லை. மொசார்த் எழுதிய இசை யொன்று, சக்கரவர்த்திக்கும், முக்கிய இசைவாணர்களுக்கும் முன்னிலையில் அரங்கேற்றப்பட்டது. அதே ஆண்டு, மொசார்த் எழுதிய இசை நாடகமும் அரங்கேற்றத்தில் வெளிவந்தது.

இத்தாலி என்றால் இன்னிசைக்குத் தாயகமாகக் கருதப்பட்டது. அந்த வகையில், மொசார்த்தை இத்தாலிக்கு அழைத்துப் போக தந்தை ஏற்பாடு செய்தார். இசைப் பயிற்சிக்கு இத்தாலியில் நிலவிய சூழ்நிலை பெரிதாக இருந்ததுடன், சிறந்த இசை வல்லுநன் என்று பெயரெடுக்க விரும்பும் எவனும் இத்தாலி நாட்டில் பெயரெடுக்காமல் இசையுலகில் உரிமை கொண்டாட முடியாது. இத்தாலிய நாட்டு இசை வாணர்கள் ஒத்துக்கொண்

டார்களென்றால், அவனது இசைப் புலமையை எதிர்ப்பின்றி ஏற்றுக் கொள்ளும்.

இத்தாலிய நகரங்களான வெனிசு, மிலான், போலோனு, நேப்பிள்சு ஆகிய இடங்களில் இசைக்கு பேராதரவு காட்டப்பட்டன. இசைக்கு ஆதரவு அளிப்போரும், இசைப் புலமைக்கு வரையறை காட்டும் பெரும் புலவர்களும் அந்த நகரங்களில் இருந்தனர். மொசார்த் மூன்று தடவை இத்தாலியில் சுற்றியிருக்கிறான். முதல் சுற்றுப் பயணம் ஒன்னறை ஆண்டுகள் பிடித்தது. வெரோனு, மாண்டுவா, மிலான், தூரின், வெனிசு, பதுவா, விசென்சா என்ற முக்கிய நகரங்கள் முதல் சுற்றுப் பயணத்தில் வந்தன. அப்பொழுது மொசார்த்துக்கு வயது பதினென்றிலிருந்து பதின்மூன்று வரைப்பட்டதாகும்.

இரண்டாவது சுற்றுப் பிரயாணம் 1771.

அவனுடைய பதினைந்தாவது வயதில் ஆரம்பமானது. மூன்றாவது சுற்றுப் பிரயாணம் அதற்கடுத்த ஆண்டு தொடர்ந்தது. முதல் சுற்றுப் பயணத்தைப் போலல்லாமல், இரண்டாவது மூன்றாவது பயணங்களில் மொசார்த் மிலான் நகருக்கு மட்டும் சென்றான்.

இத்தாலி நாட்டுக்குள் சென்ற மூன்று பயணங்களிலும், அவனுடைய இசைப் புலமை அளவுகடந்து வளர்ந்தபடி இருந்தது. முதல் தடவை, பதின்மூன்று வயதுச் சிறுவனின் இசைத் திறன் கண்டு, இத்தாலி நகர முழுவதும் ஆச்சரியத்தில் ஆழ்ந்தது. அந்தத் தடவை, புதிதாக வாத்திய இசை யொன்றும், தொடரிசை யொன்றும் மொசார்த்தால் எழுதப்பட்டன. மொசார்த்துக்கு இருந்த அதிசயிக்கத் தக்க நினைவுத் திறமை அப்பொழுது வெளிப்பட்டது. ரோம் நகரில், தேவாலயங்களில் "மிசேரார்" என்ற தெய்வீகப் பாடலை முக்கியமானவர் பாடுவர். அந்தப் பாடல் எழுத்து மூலம் தெரிவிப்பதும் பாவமாகும். நீண்ட பாடல். தலைமுறை தலைமுறையாக, குரு சொல்லி அடுத்த குருவுக்குத் தெரிந்தது, ஆலயத்துள் மட்டும் பாடப்பட்டது. கேட்பவர்களுக்கு ஓரிரண்டு அடிகள் மட்டும் ஞாபகத்திலிருக்க முடியுமேயன்றி நீண்ட அந்தப் பாடலும், அதன் இசையமைப்பும் தெரியாது. மொசார்த் ரோமுக்குப் போயிருந்த பொழுது, அந்த ஆலயத்தில் "மிசேரார்" பாடலைக் கேட்டான். இரவு தன் விடுதி திரும்பியதும், தனது நினைவிலிருந்து முழுப்பாட்டையும் இசைக் குறிப்புகளுடன் அப்படியே எழுதிவிட்டான்! தெய்வீகமென்று பாதுகாக்கப்பட்ட பாடல் எழுத்து வடிவில் வெளியுலகில் படிக்கப் படுவதைக் கண்டு குருமார்கள் திகைத்தனர். பதினைந்து வயதுச் சிறுவன் தன் நினைவிலிருந்து செய்தான் என்பதை முதலில் அவர்களால் நம்ப முடியவில்லை. மொசார்த்தின் பெயர் பரவுவதற்கு இந்தச் சம்பவமும் ஒரு காரணமாயிருந்தன.

மொசார்த்தின் இசை நாடகங்கள் மிலான் நகரில் பெரும் ஆதரவைத் திரட்டின. பொலோனு நகரில் இருந்த "பில்கார்மானிக் சொசைடி" என்ற இசைக் கழகம் மோசார்த்தைக் கடும் பரிட்சைக்குள்ளாக்கி, தனது அங்கத்தினராகச் சேர்த்துக் கொண்டது. பொலோனு இசைக் கழகத்தில் பெரும் "சங்கீதப் புலிகளே" அங்கத்தினராக முடியும். அறுபது, எழுபது வயதைத் தாண்டிய மேதைகளின் மத்தியில், பதினைந்து வயதுச் சிறுவனும் இடம் பெற்றான், தனது இசைப் புலமையால்! வெரோனு நகரிலிருந்த இசைக் கழகம், "இசைப் புலவன்" என்ற பட்டத்தை அவனுக்கு அளித்தது.

இத்தாலி நாட்டுச் சுற்றுப் பயணங்களை முடித்துக்கொண்டு மொசார்த் குழுவினர் தங்களூரான சால்சுபர்குக்குத் திரும்பினார்கள். அவர்கள் வந்தபொழுது புதிய மத குரு அந்தக் கிராமத்துக்குப் பிரபுவாக இருந்தார். அவருக்கு இசை என்றால் அவ்வளவு பிடிப்பதில்லை. மாதா கோயிலில் தொழுகை நேரங்களில் பாடப்படுவதைத் தவிர, இசைக்கு வேறு பயன் அவரால் கண்டு பிடிக்க முடியவில்லை. மொசார்த் குடும்பத்தினர் மிக அலட்சியமாக நாடத்தப் பட்டனர். விருந்துகளில், வேலையாட்கள், சமையற்காரர்கள் இவர்களுடன் உட்கார்ந்துதான் அவர்கள் உண்ணவேண்டும். இந்த முறை புதிதாக உண்டாக்கப்படவில்லையென்றாலும், இளைஞன் மொசார்த்துக்கு வெறுப்பைத் தந்தது. இத்தாலிய நகரங்களில் பிரபுக்களுடனும், பெரிய மனிதர்களுடனும், இசைவாணர்கள் உறவாடும்பொழுது, இங்கு மத குருவின் மண்டபத்தில் 'வேலையாட்களைப் போன்று நடத்தப்படுவது அவனுக்கு வேதனையைத் தந்தது. தந்தை லியோபால்டு பொறுத்துக்கொண்டாலும், பதினேழு வயதினனை மொசார்த்தின் உள்ளம் கொதித்தது, மதகுருவின் மமதை கண்டு. வெளியில் அதிகம் கிளம்பாமல், மொசார்த் பாடல்கள், பண்கள், இசை நாடகங்கள், தொடரிசைகள் எழுதியபடி இருந்தான். அவ்வப்பொழுது வெற்றிச் செய்திகள், "மொசார்த்தின் இசை நாடகம் மிலான் நகரில் வெற்றியுடன் நடைபெறு

கிறது,'' "மொசார்த்தின் இசைப் பாடல் பொலோனு நகரில் போற்றப்படுகிறது,'' "வெனிசு நகரில் மொசார்த்தின் இசைப் பாடல்கள் விரும்பப்படுகின்றன'' என்று வரும். சொந்தக் கிராமத்தில் அலட்சியம் காட்டப்பட்ட போதிலும், தொலைநாடுகளில் மொசார்த்தின் புகழ் அணையாதிருந்தது.

1777ல், அவனுடைய இருபத்தொன்ருவது வயதில், மொசார்த் தனது கிராமத்தில் அடைந்து கிடக்க முடியாமல், மற்றொரு சுற்றுப் பிரயாணத்திற்குக் கிளம்பினன். இந்தத் தடவை லியோபால்டு உடல் நலமில்லாததால், தன் தாயுடன் மொசார்த் கிளம்பினன். பாரிஸ் நோக்கிக் கிளம்பிய அவர்கள் முதலில் மூனிச் நகரை அடைந்தனர். அதன்பின் மான்னகம் என்ற சிறு நகருக்கு வந்தார்கள் தந்தை அறிவித்திருந்தபடி மொசார்த் அந்த ஊரை விட்டு உடனே கிளம்பவில்லை. ஏனென்ருல் இளைஞன் வாழ்வில் முதல் தடவையாக காதல் குறுக்கிட்டது.

மான்னகம் ஊரில், பிரிதிலின் வீபர் என்பவரை மொசார்த் சந்தித்தான். வீபர் அந்த நகரப் பிரபுவின் அரண்மனை இசையாளராக இருந்தார். ஒரே துறையில் தேர்ச்சி பெற்றவர்கள் என்ற காரணத்தால் இருவருக்கும் நட்புண்டாகி, வீபர் குடும்பத்தாருடன் பழகும் வாய்ப்பு மொசார்த்துக்குக் கிடைத்தது. வீபருக்கு நான்கு பெண் மக்கள், சோசேபா, அலியோசியா, கான்சுடான்சு, சோபி என நால்வர் இருந்தனர். இவர்கள் அனைவரும் நன்ருக பாடக்கூடியவர்கள். பிற்கால வாழ்விலும், இவர்களெல்லோரும் இசைத் துறையில் தேர்ந்தவர்களின் மனைவியாகப் போயினர். இவர்களில் இரண்டாவது பெண்ணன அலியோசியாவைக் "கண்டதும் காதல்'' என்றவாறு மொசார்த் காதலிக்கத் தொடங்கினன். அப்பொழுது மொசார்த்துக்கு வயது இருபத்திரெண்டு—அலியோசியாவுக்கு வயது பதினறு.

மகன் வீபர் குடும்பத்தாருடன் — அதிலும் அலியோசியாவிடம் நேரத்தைக் கழிப்பதும், அதனல் பாரிசு நோக்கிப் புறப்பட்ட பயணம் தடைப்படுவதும் தந்தைக்குத் தெரிந்தது. உடனே "கலையையும் எதிர்காலத்தையும் எண்ணி'' பாரிசுக்கு போகும்படி கண்டிப்பாக கடிதம் எழுதினர். அவருடைய கடிதத்தில், "அழகிய முகங்களின் கவர்ச்சியால் கலைஞனின் உள்ளம் கரைந்துவிடக் கூடாது'' என்றும் அவர் எச்சரித்திருந்தார். தந்தையின் கட்டளைப்படி, மொசார்த் தன் தாயுடன் பாரிசு நகரம் வந்து சேர்ந்தான்.

எதிர்பார்த்த அளவு பாரிசில் வரவேற்பு மொசார்த்துக்குக் கிடைக்கவில்லை. முதல் தடவை, பதினைந்து ஆண்டுகளுக்கு முன்னம் அவன் வந்தபொழுது, அவன் ஏழு வயதுச் சிறுவன், இப்பொழுது இருபத்திரண்டு வயது இளைஞன். வயது பற்றி முதலில் இருந்த ஆச்சரியம் இப்பொழுது இல்லை. பாரிசு நகரத்து இசைவாணர்களும், ரசிகர்களும் வேறு பிரச்சினைகளில் ஈடுபட்டிருந்தனர். கிளக், பிக்கினி என்ற இரு பெரும் இசைப் புலவர்கள் கருத்து வேறுபாடு கொண்டு, இரு கட்சிகளாகப் பிரிந்து சண்டையிட்டனர். இந்த சச்சரவில் மொசார்த்துக்கு தரப்பட வேண்டிய வரவேற்பு தரப்படவில்லை. இருந்தாலும், பாரிசில் தங்கியிருந்தபொழுது மொசார்த் ஒரு புதிய இசை நாடகத்தையும், தொடரிசையையும, சில புதுப்பாடல்களையும் அரங்கேற்றினன். அவை உயர்ந்த வகைகளாக இருந்த போதிலும், அவற்றிற்குரிய வெற்றி வரவில்லை. இந்தச் சமயத்தில் மொசார்த்தின் தாய் இறந்துவிட்டார். மிக மனத்துயரத்தோடு தனயன் பாரிசை விட்டு தன்னூர் கிளம்பினன். மற்றொரு துயர் தரும் செய்தி அவனுக்குக் காத்திருந்தது. போகும் வழியில், வீபர் குடும்பத்தினரை மூனிச்சில் சந்தித்தான். அவனுடைய உள்நோக்கம் அலியோசியாவைச் சந்திக்க வேண்டுமென்பதாகும். ஆனல் அலியோசியாவை அந்தக் குடும்பத்தில் காணேம். எங்கே அவள்? இளைஞன் அறிந்துகொள்ளத் துடித்தான். பதிலில் பேரிடி தாக்கியது. அலியோசியா வேருெருவனை மணந்துகொண்டு விட்டாளாம்!

உடைந்த உள்ளத்துடன், தாயை இழந்து தன் இதயத்தில் உருவான முதற் காதலை இழந்து மொசார்த் சால்சுபர்க் திரும்பினன். அதற்குப் பின் இரண்டாண்டுகள் கிராமத்தில், உற்சாகமின்றி, மனப் புண்களை ஆற்றிய வண்ணம் அவன் இருந்தான். சில சமயங்களில் புதிய இசைப் பாடல்களை, பண்களை எழுதிய வண்ணம் இருப்பான். அவன் எழுதிய இசை நாடகம் ஒன்று, 1781ல்-அவனுடைய இருபத்தைந்தாவது பிறந்த நாளுக்கு முன்னதாக, மூனிச் நகரில் அரங்கேற்றப் பட்டது. அதில் கிடைத்த வெற்றி, அவனுக்குப் புதிய ஊக்கத்தை அளித்து, கிராம வாழ்வை விட்டு புறப்படச் செய்தது. மேலும் குருமாரின் ஆட்சியில் இசைக் கலைஞர்களுக்கு காட்டப்பட்ட இழிவு, அவன் உள்ளத்தில் கொந்தளிப்பை உண்டாக்கியது. வேலைக்காரர்கள்,

சமையற்காரர்கள் இவர்கள் நிலைமைதான் இசைவல்லுநருக்கும் தரப்பட்டது. ஒரு சமயம் மதக்குரு தன் பரிவாரங்களுடன் வேற்றூர் வந்திருந்த பொழுது, அங்கிருந்தவர்கள் மொசார்த்தின் இசை கேட்கத் காத்திருந்தனர். மொசார்த்தும் தயாரானுன். ஆனுல் மதக்குரு வேண்டாமெனத் தடுத்துவிட்டார். மொசார்த்தின் வெறுப்பும், கோபமும், உச்ச நிலையடைய, தன் வேலையைத் துறந்துவிட்டு வியன்னு நகருக்கு வந்தான்.

வியன்னு நகரில், மொசார்த் வீபர் குடும்பத்தினரைச் சந்தித்தான். பிரிதோலின் வீபர் இறந்துவிட்டார். முதலிரண்டு பெண்களும் திருமணமாகிவிட, கடைசி இரண்டு பெண்களான கான்சுடான்சு, சோபி இருவர்களுடன் வீபர் மனைவி வியன்னுவில் குடியேறினுள். இந்தத் தடவை, மொசார்த் கான்சுடான்சின் மேல் காதல் கொள்ள ஆரம்பித்தான். "மறுபடியும் ஒரு பெண்—அவளுடைய தங்கை" என்று தந்தை லியோபால்டு மகனை எச்சரிக்கத் தொடங்கினுர். ஆனுல் மொசார்த் தன் காதலியை கைவிட முடியாதென பிடிவாதமாக இருந்தான். தந்தையின் அனுமதி கேட்டு கடிதம் எழுதினுன். வேறு வழியின்றி, தந்தையும் அனுமதி தந்தார். அந்த அனுமதிக் கடிதம் வருவதற்குள் திருமணம் நிறைவேறி விட்டது.

மொசார்த்துக்கு ஏற்ற மனைவியாக கான்சுடான்சு அமையவில்லை. வரவுக்கேற்ற வகையில் செலவு செய்யாமல், எப்பொழுதும் போதாக் குறையிலேயே அவள் குடும்பத்தை நடத்தினுள். கலைத்துறையில் எண்ணத்தையும், நேரத்தையும் செலவிட்ட மொசார்த்தால், குடும்பப் பொறுப்பைக் கவனிக்க முடியவில்லை. நிலையான அமைதி மொசார்த் வாழ்வில் நிலைபெறவில்லை. ஆனுல் கணவன் மனைவி இருவரும் உள்ளன்புடன் ஒருவரையொருவர் நேசித்தனர். காதல் என்று சொல்ல முடியாவிட்டாலும் நெருங்கிய பாசமும் நேசமும் நிலவியது. தன் வாழ்நாள் இறுதிவரை—அது நீண்ட தூரத்தில்— மொசார்த் வேருெரு பெண்ணை நாடியதில்லை. கலைத்துறையில் அஞ்சுகங்களும், அழகு மயில்களும் ஆயிரமாயிரம் கொஞ்சி ஆடியபொழுதும், தன் மனைவியிடம் மாருத அன்புடன்— உண்மையுடன் அவன் இருந்தான். கலைத்துறையில் வல்லார் என்ருல் களங்கமுடைய வாழ்க்கையில் இருப்பார் என்பது மொசார்த் வகையில் பொய்யாகியது! குறுகிய வாழ்வில் இசைத் துறைக்கு அவன் செய்யவேண்டியது ஏராளமாக இருந்தது! வேறு வீண் அலுவல்களில் அவன் மனம் செல்லவில்லை.

கலையில் ஈடுபடும் திறனும், சூழ்நிலை எப்படி இருந்தபோதிலும் உயர்ந்து நிற்கும் பண்பும் மொசார்த்திடம் இருந்தன. திருமணமான பின் அவன் வாழ்வு ஏழ்மைக் கோல மடைந்ததென்றே சொல்லவேண்டும். குடும்பத் தொல்லைகளை அவன் தாங்கவேண்டியிருந்தது. குழந்தைகள் பிறந்தன, அவைகளுக்குத் தகுந்த பராமரிப்பில்லாததால், சிறு வயதில் இறந்தன. ஒவ்வொரு தடவையும் மொசார்த்தின் இதயத்தில் வேதனைப் புண்ணைக் கிளறிவிட்டு, வீட்டில் அடிக்கடி நோய், நொடி, மரணம் படையெடுத்தன. இசைக் கலைஞன், உலகை இசையால் மகிழ்வித்தவன், அவன் குடும்பம் இல்லாத குறையால் என்றென்றும் அல்லற்பட்டபடி இருந்தது. ஆனுல் இவ்வளவு அல்லல்களுக்குமிடையில், அவன் எழுதிய இசை, அளித்த பண்கள் குற்றமற்று, அவசரமோ, படபடப்போ இன்றி, உயர்வும் தூய்மையும் கொண்டதாயிருந்தன. அவனுடைய சிறந்த இசையமைப்புகளில் ஒன்ருக விளங்கும் D மைனர் குவார்டட் என்பது, உண்மையில் அவன் மனைவி அடுத்த அறையில் முதற் பிள்ளைப்பேறில் இருக்கும்பொழுது அவன் எழுதியதாகும். அந்த இசையமைப்பைக் கண்ணுற்ற கேய்டன் என்ற இசைப் புலவர்—அந்தக் காலத்தில் அவர்தான் ஒப்புயர்வற்ற இசை மேதையாகக் கருதப்பட்டவர்—"உம்முடைய மகன்தான் இப்பொழுது இருப்பவர்களில் மிகச் சிறந்த கலைஞன் ஆவான்!" என்று மொசார்த்தின் தந்தைக்குக் கடிதம் எழுதினுர். மொசார்த்தின் இசை கண்டு மகிழ்பவர்களுக்கு அவன் எவ்வளவு துன்பங்களுக் கிடையே எழுதி முடித்தான் என்பது தெரியாது.

அடிக்கடி பணம் தேவைப்பட்டதால், உடல் நலத்தையும் பாராமல் மொசார்த் இசை எழுதித் தரவேண்டியிருந்தது. பெரும்பாலும் தானெழுதியதை, அவனே வாசித்துக் காட்டுவதும் வழக்கம். மிக வேகமாக, குறுகிய காலங்களில் எழுதப்பட்டவைகளாக யிருந்தபோதிலும், அவைகளில் சிறிது பிழையோ, தவறுதல்களோ, மாறுதல்களுக்கு இடமளிப்பவைகளாகவோ அன்றி, வடித்தெடுக்கப்பட்ட இசைச் சிற்பங்களாக, புரைதீர் இசை ஓவியங்களாக அவை இருக்கின்றனவாம். பணம் பெறவேண்டி—அவன் இசை எழுத உட்கார்ந்தபோதிலும், இசை எழுதும்பொழுது அவன் உள்ளத்தில் இசையின்பம் ஒன்று

தான் பெருக்கெடுத்தோடியது. பின்பு எதிர் பார்த்த பணம் கிடைக்கவில்லை யென்றாலும் அவன் கவலைப்படுவதில்லையாம்.

இசை நாடகங்கள்தாம் மொசார்த்தின் கவனத்தைப் பெரிதும் கவர்ந்தன. இத்தாலி, சேர்மன் இரண்டு மொழிகளிலும் இசை நாடகங்கள் எழுதும் வலிமை அவனுக்கு இருந்தது. அவன் எழுதிய இசைநாடகங்கள், அரிய மணிகளையும், மாணிக்கத்தையும் வைரத்தையும், பச்சையையும் சிவப்பையும், மற்றைய நவரத்தினங்களையும் சேர்த்துக் கட்டப்படும் அழகான, வேலைப்பாடான கிரீடம்போல் ஒவ்வொன்றும் இருக்கின்றனவாம்.

அவனுடைய கடைசி ஆண்டுகளில்—அவன் வாழ்ந்தது முப்பத்தாறு ஆண்டுகள், அதில் கடைசி நாலைந்து ஆண்டுகளில்—மொசார்த் ஏராளமாக எழுதிக் குவித்தான். வாழ்நாள் குறுகிய கடைசி நிலை அடைகிறது என்பதை உணர்ந்தானோ என்னவோ, ஆழத்தில் இருட் குகையில் மூச்சடக்கி நிற்பவன் கிடைக்கும் முத்துக்களை அவசர அவசரமாக எழுந்து வெளியே வீசிவிடுவதைப்போல, மொசார்த் கடைசி நாட்களிலும் இசை முத்துக்களை வெளியுலகுக்குத் தந்தபடி இருந்தான். அவன் வாழ்வு உண்மையில் ஏழ்மையின் ஆழத்தில், வறுமையிருளில் சிக்கி இருந்தது. அவன் தந்த இசை முத்துக்கள் வெளியுலகில் ஒளிவிட்டன, அவனிருந்த இடத்தை ஒளிபெறச் செய்ய கடைசியாக மொசார்த் எழுதியது ரிகுயம் (இரங்கற்பா) என்பதாகும். இறந்தவர்களுக்காகப் பாடப் படுவதாகும். இதை பெயரறிவிக்காத ஒருவர் எழுதச் சொன்னாராம். அவருடைய எண்ணம், மொசார்த் எழுதிய பாட்டை தன் பெயரில் வெளியிட்டு பெயர் சம்பாதிக்கப் பார்த்தாராம். அந்த ஆள் ஒரு முட்டாளாக இருந்திருக்க வேண்டும். ஏனென்றால் ஊர் பேர் தெரியாத ஒருவர் திடீரென்று உலகம் கண்டு வியக்கும் வகையில் ஒரு இசையை அமைத்துவிட்டதாக வெளிவர முடியுமா? அதுகூடவல்ல, மொசார்த் இயற்றிய இசையின் கீழ் "மொசார்த்" என்ற பெயரிடப் படாவிட்டாலும், அந்த இசையைக் கேட்பவர்கள் "அந்த இசையை மொசார்த்துதான் இயற்றியிருக்கவேண்டும்—இயற்றினார்." என்று தாமதமின்றி சொல்லி விடுவார்கள். ஆனால் ஊர் பேர் தெரியாதவர்கள், மொசார்த்தைக் கொண்டு இசை எழுதிக் கொண்டு போகலாம் என்ற எண்ணம் பிறக்கும் வகையில் மொசார்த்தின் நிலை இருந்தது.

இளமைப் பருவத்தில், கவலையில்லாமல், சீராட்டி, பாராட்டி, வளர்க்கப்பட்ட மொசார்த், வாலிபப் பருவத்தில் வறுமையுடன் கடுமையாகப் போராட வேண்டியிருந்தது. வியத்தகு முறையில் அவன் இசைத் திறமை வளர்ந்திருந்த போதிலும், வியன்னா நகரில் அவனுக்கு நிலையான வேலை யெதுவும் கிடைக்கவில்லை. அரண்மனைகளில் அவனது இசை வாசிக்கப்பட்டது; விருந்து வேடிக்கைகளில், மாளிகை மண்டபங்களில் அவனமைத்த புதிய பண்கள் இசைக்கப்பட்டன. ஆனால் அவனது வீட்டில் வறுமை தன் பழைய பல்லவியை மீட்டியபடிதான் இருந்தது. பிச்சை யெடுக்காத குறை ஒன்றுதான், அந்த அளவு குடும்பம் இருந்தது. எந்த வியன்னாவுக்கு, எந்த உலகுக்கு அவன் இசைப் பாடல்களையும், அமிழ்தூறும் பண்களையும். இனிய நாடகங்களையும், வாரி வாரி வழங்கினானோ, அந்த நகரும், உலகும் மொசார்த்தை மதிப்புடன் போற்றவில்லை, மகிழ்ச்சியுடன் வாழவிடவில்லை. மொசார்த்தும் தன் இசைப் புலமையை உலகுக்கு காட்டினானே யொழிய, தன் வறுமை நிலையைக் காட்டிக் கொள்ளவில்லை.

இடைவிடாத உழைப்பால், நீங்காத வறுமைக் கொடுமையால், மொசார்த்தின் உடல் நிலை தளர்ந்தது. டாக்டர்களால் உணரமுடியாத நோய் அவன் உடலைத் தாக்கியது. கடைசியாக 1791 டிசம்பர் 5ந் தேதி மொசார்த்தின் உயிர் பிரிந்தது. உயிர் பிரியும் கடைசி நேரத்தில் அருகிலிருந்த நண்பர்கள் அவன் எழுதிய இரங்கற்பாவை (மரண கீதத்தை)ப் பாடினார்கள். மொசார்த்தின் பிணத்தை அடக்கம் செய்வதற்கான செலவுக்குக் கூட பணம் அவன் குடும்பத்தாரிடம் கிடையாது. நண்பர்கள்—அவனுடைய நண்பர்களும் ஏழைகளாய், ஆனால் நல்லவர்களாய் இருந்திருக்க வேண்டும்—ஒன்று கூடி தங்களால் இயன்ற அளவு பணத்தைச் சேர்த்து, மிக ஆடம்பர மற்ற முறையில் பிணத்தை எடுத்துச் சென்றார்கள். மாதாகோவில் புதைகுழி மைதானத்திலும், பெரும் பணக்காரர்கள், பிரபுக்கள், வசதி யுடையவர்களுக்குக் கிடைப்பதைப் போன்று பளிங்கு மேடையோ பளப்பளப்பான கல்லறையோ கட்டப்படவில்லை. பிணத்தைப் புதைக்க வறுமையாளருக்காக ஒதுக்கித் தரப்படும் மூலையில் ஒரு சிறு இடத்தை மதக் குரு தந்தார். மண்ணால் மூடப்பட்ட சிறு மேடு! அத்துடன் மொசார்த் உடல் மறைந்தது! அடுத்த ஆண்டு மொசார்த்தின் புதைக்குழியைக் காணச் சென்ற ஒருவருக்கு, அது எங்கிருக்கிறதென்றே தெரியாமல் போயிற்று!

மொசார்த் வாழ்ந்தது முப்பத்தைந்து ஆண்டுகள்தாம். அதற்குள் ஒரு நூற்றாண்டில் அடையக்கூடிய முதிர்ச்சியையும் புலமையையும் காட்டிவிட்டுச் சென்றான். குறுகிய வாழ்வு. அதனால்தான் மூன்றாவது ஆண்டிலேயே தன் வேலையைத் தொடங்கினான், முப்பத்தைந்தாவது ஆண்டில் நின்றுவிட்டது. வறுமையைப் பரிசாகப் பெற்ற போதிலும். உலகுக்கு அவன் அளித்த இசைச் செல்வங்கள் பலப்பல. "இங்கே சிறந்த அடக்கம் செய்யப்பட்டான்" என்று காட்டுமளவுக்கு, உயர்தரக் கல்லறை அமைக்கப் படவில்லை, ஆனால் "மொசார்த் என்பவன் இவ்வுலகில் வாழ்ந்தான்" என்பதைக் காட்டுவதற்கு, அவன் இயற்றிய இசை நாடகங்கள், பண்கள், பாட்டுகள், தொடரிசைகள், வரிகள் இசையுலகில் மங்காத மாணிக்கங்களாக ஒளிவீசுகின்றன.

— முடிவுற்றது —

ஜேம்ஸ் சிம்சன்

★

1847-ல் ஜேம்ஸ் சிம்சன் என்பவர் குளோரபாரம் என்ற மயக்க மருந்தைக் கண்டு பிடித்தார். மருத்துவத் துறை வளர்ச்சியில் இது ஒரு திருப்பமாகும். மயக்கமடைந்த நிலையில் நோயாளிகள் வலியை உணராது சிகிச்சைபெற்றனர். ஆரம்பக்காலத்தில் குளோரபாரம் குழந்தையைப் பெற்றெடுக்கும் தாயின் வேதனையைக் குறைக்க கொடுக்கப்பட்டது.

ஆனால், மதவாதிகள் இந்த மயக்க மருந்து முறை கையாளுவதைக் கண்டித்தனர். பிரசவ வேதனையைக் குறைக்க முயல்வது கடவுளுக்கு எதிரான காரியமாகும் என்று கூறினர். "துன்பத்தில்தான் நீ குழந்தைகளைப் பெறவேண்டும்" (In Sorrow thou Shalt bring forth Children) என்ற பைபிள் வாக்கியத்தை நினைவூட்டி மயக்க மருந்திற்கு எதிர்ப்புக் காட்டினர்.

மயக்க மருந்தை கடவுள் அனுமதித்ததோடு அவரே அதைப் பயன் படுத்தியு மிருக்கிறார், என்று சிம்சன் கூறினார். "என்னை எதிர்ப்பவர்கள் பைபிளின் இரண்டாவது அதிகாரத்தில் 21-வது வரியை மறந்துவிட்டார்கள். அதில் ரண சிகிச்சைப் பற்றிய முதல் குறிப்பு கிடைக்கிறது. உலகத்தைப் படைக்கும்பொழுது கடவுள் தன் சக்தியின் மூலம், ஆதாம் உணர்வற்ற உறக்க நிலை யடையும்படிச் செய்த பிறகே, அவனுடைய விலா வெலும்பை எடுத்து அதிலிருந்து ஏவாளை உண்டாக்கினார்." என்று சிம்சன் எடுத்துக் காட்டினார்.

சிம்சன் பதினெட்டாம் நூற்றாண்டில், அறிவியற் கருத்துக்கள் மதக் கருத்துக்களை வென்று வீழ்த்தி பீடு நடை போட்டுக்கொண்டிருந்தபோது தோன்றியவராகும். ஒரு ஐந்து நூற்றாண்டுகளுக்கு முன்பு தோன்றி, குளோரபாரத்தைக் கண்டுபிடித்திருந்தால் அவரும் புரூனோ எரிக்கப்பட்டதைப் போல கடுந்தண்டனையை அடைந்திருப்பார்.

நாதசுர இசைப்பெரும் புலவர்

இராசரத்தினம்

திராவிடத்தின் இசைப்பெரும் புலவரான டி. என். இராசரத்தினம் அவர்களும், திராவிடத்தின் அரசியல் பேரறிஞர் அண்ணு அவர்களும் ஒரிடத்தில் அமர்ந்திருக்கும் காட்சியே இவ்விதழ் அட்டைப்படமாக விளங்குகிறது.

25—1—56ஆம் நாளன்று தோழர் எசு. எசு. பி. இலிங்கம் (வேதாச்சலம்) அவர்களின் திருமகளார் மணிமேகலை, அழகு ராணி ஆகியோர்க்கு எழுத்தறிவிக்கும் விழா நடைபெற்றபோது அறிஞர் அண்ணு அவர்களும், இசைப் பெரும்புலவர் இராசரத்தினம் அவர்களும் பக்கத்துப் பக்கத்தே அமர்ந்திருந்து உரையாடி மகிழ்ந்திருந்தனர்.

அறிஞர் அண்ணு அவர்கள் தோழர் இராசரத்தினம் அவர்களைப் பாராட்டிப் பேசும் போது அன்று குறிப்பிட்டபடி, தமிழகத்தின் பறிபோகாச் செல்வமான நாதசுர இசையைப் பண்போடும், புகழோடும் பூரிப்போடும் காப்பாற்றிவரும் பெருமை அனைத்தும் திருவாவடுதுறை நாதசுர இசைப் பெரும்புலவர் இராசரத்தினம் அவர்களையே சாரும். நாதசுர இசையில் தேர்ச்சி பெற உலகில் எவ்வளவோ பேர்கள் முயன்று பார்க்கிறார்கள்; எவராலும் முடியவில்லை, எல்லாத் துறையிலும் ஆதிக்கம் செலுத்த முயன்று, அந்தந்தத் துறையில் ஓரளவுக்கு வெற்றிகூடப் பெறமுடிந்த ஆரியப் பார்ப்பனர், இந்த ஒரு துறையில்தான் புக முடியாமலும், வெற்றி பெற முடியாமலும் திகைக்கிறார்கள். அவ்வளவு அருமையான நாதசுர இசைக்கலையை மிகச் செழிப்பாகப் போற்றி வளர்க்கும் பண்பு தோழர் இராசரத்தினம் அவர்களிடம் செறிந்து கிடப்பது எல்லோராலும் பாராட்டத்தக்க தொன்றாகும்.

தோழர் இராசரத்தினம் அவர்களின் நாதசுரத்திலிருந்து எழும்பும் கவர்ச்சிகரமான—இனிய—கம்பீரமான ஓசை வேறு எவருடைய நாதசுரத்திலும் எழும்பவில்லை என்று கூறினால் அது மிகையாகாது. வேறு யாரும் எட்டிப் பிடிக்க முடியாத ஒரு தனிநிலையைத் தமக்கென்றே அவர் ஏற்படுத்திக்கொண்டு, அதில் எக்களிப்போடு உலாவி வருகிறார். அறிஞர் அண்ணு அவர்கள் சுட்டிக் காட்டியதைப்போல், அவரது நாதசுரத்தில் குழலின் ஒலி, வீணையின் ஒலி, மகுடியின் ஒலி, பிடிலின் ஒலி முதலிய எல்லா வகை ஒலிகளையும் அப்பழுக்கற்ற முறையில் அப்படியே கேட்டு இன்புறலாம். அவ்வளவு உயர்ந்த இசைப்புலமை அவரிடம் அமைந்திருக்கிறது.

இந்திய அரசியலார், அவரது அருமை பெருமைகளை உள்ளது உள்ளவாறு அறிந்த காரணத்தால்தான், அவருக்குப் பட்டம் வழங்கி அவரைப் பெருமைப்படுத்தி, இந்த ஒருவகையில் பழி தேடிக் கொள்ளாமலிருக்கிறார்கள்.

நாதசுரத்தின் அமைப்பையும், தோற்றத்தையும் புதுக்கிய பெருமைகூடத் தோழர் இராசரத்தினம் அவர்களைச் சாரும் என்று இசை வல்லுநர்கள் கூறுகிறார்கள்.

இசைப் பாட்டுப் பாடும் திறனும் தோழர் இராசரத்தினம் அவர்களுக்கு உண்டு. அவரது நாதசுரத்தில் புகும் ஒலி, அவரது சிறந்த இசைப்பாட்டு ஒலியாகவே நுழையும் காரணத்தால்தான், அவரது நாதசுர இசை தனித்தன்மை பூண்டதாக இலங்குகிறதோ என்று கூட எண்ணத் தோன்றுகிறது.

சென்னைக் கடற்கரையில், மாபெருங்கூட்டம் கூட்டி, அவரது நாதசுர இசையை ஐந்து இலட்சத்திற்கு மேற்பட்ட மக்கள் அதில் கூடியிருந்து கேட்கும்படி செய்து, அவருக்குப் பொதுமக்கள் சார்பில் பொன்னுடை போர்த்த வேண்டும் என்று அறிஞர் அண்ணு அவர்கள் வெளியிட்ட கருத்து விரைவில் நிறைவேறுவதற்கான வழிவகைகளை எல்லோரும் காண்போமாக! அறிஞர் அண்ணு அவர்கள் முன்னின்று முயற்சி எடுத்து நடத்துவார்கள் என்பது உறுதி!

இசைப் பெரும் புலவரான டி. என். இராசரத்தினம் அவர்கள் நெடிது நாள் வாழ்ந்து, எழில் திராவிடத்திற்கு என்றென்றும் இன்பம் ஊட்டுவார்களாக! வாழ்க இராசரத்தினம்!

(22-ம் பக்கத் தொடர்ச்சி)

மறுநாள் பாஸ்கரன் புதிய பொலிவுடன் காணப்படுவதைப் பார்த்து அன்னபூரணியம்மாள் மகிழ்ந்ததோடு, தனது முடிவை மாற்றிக் கொண்டதாக, கல்லூரிக்குப் போவதாக அவன் கூறியதைக் கேட்டு மதுரை மீனாட்சியினால் நல்ல காலம் பிறக்கிறது என்று எண்ணினாள்.

வழக்கமாகக் கிளம்பும் நேரத்திற்கு முன்னதாகவே பாஸ்கரன் கல்லூரிக்குக் கிளம்பினான். பஸ் ஸ்டாண்டில் வந்து நின்றவன் காந்தி நகரிலிருந்து வரும் பஸ்கள் ஒவ்வொன்றுகப் பார்த்துக் கடைசியாக ஒரு பஸ்ஸில் ஏறினான். அதில் வசந்தா இல்லாமல் இல்லை! ஏறியதையும் வசந்தா பார்க்காமலில்லை. அவளது இதழில் ஒரு சிறு புன்னகை மின்னலெனத் தோன்றி மறைந்தது. பஸ்ஸில் இருப்பவர்களைப் பார்ப்பது போல் அடிக்கடி திரும்பித் திரும்பி வசந்தாவைப் பார்த்தான். அரசினர் கல்லூரியில்வசந்தா இறங்கினாள். பாஸ்கரனும் இறங்கினான். வசந்தா ஆச்சரியத்தோடு பாஸ்கரனைப் பார்த்துவிட்டு கல்லூரிக் காம்பவுண்டுக்குள் நுழைந்தாள். வேறு பஸ்ஸுக்காக நிற்பது போல் அங்கு நின்றுகொண்டு வசந்தாவைப் பார்த்துக் கொண்டிருந்தான். அவள் மறைந்ததும், வேறு பஸ்ஸில் ஏறி தனது கல்லூரிக்குக் கிளம்பினான்.

வகுப்பறையில் நுழையும் போது கொஞ்சம் நேரமாகிவிட்டது. பாஸ்கரனை பார்த்த எல்லோரும் ஆச்சரியப்பட்டனர். ஆசிரியர் அவனைக் கூப்பிட்டு அதற்கு சற்றுமுன் பிரின்சுபால் வந்து கூப்பிட்டுச் சென்றதாகக் கூறினார். உடனே பிரின்சுபால் அறைக்குத் திரும்பினான். அங்கே வந்ததும், பிரின்சுபால் யாரிடமோ இறைந்து கொண்டிருந்தார்.

"எல்லாம் திமிரு! பணத்தைசெலவழித்து உங்களைப் படிக்கச் சொன்னு நீங்க விளையாட்டா விளையாடுறிங்க!"

பாஸ்கரன் பயந்துகொண்டே நுழைந்தான். அங்கே கனகசபை நின்று கொண்டிருந்தான்.

"வா பாஸ்கர்! உனக்கு வந்த காதற்கடிதத்தை எழுதியவன் இவன்தான். நேற்றுதான் தெரிஞ்சுது. மூன்று வாரம் இவனை சஸ்பெண்ட் செய்திருக்கேன். இனி உனக்கு எந்த கவலையும் வேண்டாம்."

கடிதத்தை கனகசபை எழுதியிருப்பானென்று எதிர்பார்க்கவில்லை. அவன் அழுது கொண்டிருப்பதைப் பார்த்ததும் பரிதாபமாக இருந்தது. "அவனை மன்னித்துவிடுங்கள் சார்! கடிதத்தைப் பற்றி நான் கவலைப்படவில்லை!"

கடைசியாக பிரின்சுபால் கனகசபையை கண்டித்து, மன்னித்து அனுப்பினார். வெளியே வந்த கனகசபை, "பாஸ்கர்! நான் விஷயம் இவ்வளவு பெரிதாகிவிடும் என்று நினைக்கவேயில்லை. விளையாட்டாகத்தான் எழுதினேன்!"

"பரவாயில்லை! எனக்கு உன் பேரில் கோபம் கிடையாது. நீ எனக்கு நல்லதுதான் செய்தாய்!"

பாஸ்கரன் பேசியதை கனகசபையால் புரிந்துகொள்ள முடியவில்லை.

மறுநாள் சோமநாத முதலியாருக்கு கடிதம் பற்றிய உண்மையை பிரின்சுபால் கடிதம் மூலம் தெரிவித்திருந்தார். சோமநாத முதலியார் அடைந்த மகிழ்ச்சிக்கு அளவில்லை. மீனாட்சியம்மன் கருணை வைத்து தன் பிள்ளையைக் காப்பாற்றியதாக அன்னபூரணியம்மாள் எண்ணிக் கொண்டாள். அபிஷேக ஆராதனைக்கு ஏற்பாடுகள் நடைபெற்றன.

* * *

இரண்டு வாரங்களுக்குப் பின் பாஸ்கரன் பெயருக்கு ஒரு கடிதம் வந்தது. தனக்கு வந்ததென தவறுதலாக சோமநாதர் பிரித்துப் படித்தார்.

ஆருயிர் பாஸ்கருக்கு,

வணக்கம். உங்கள் கடிதம் கிடைத்து ஒரு வாரம் கழித்து பதில் தருவதற்கு வருந்துகிறேன். என்னைப் பார்க்கவேண்டி நீங்கள் காலையிலும் மாலையிலும் பஸ்ஸில் அதிக நேரம் செலவழிப்பதால் உங்கள் படிப்பு தடைப்படும் என்றே எண்ணுகிறேன். படிப்பு கெடும் வகையில் நாம் எதையும் செய்யக் கூடாது. நான் தங்களை சென்ற ஆண்டே பார்த்திருக்கிறேன். அன்று நீங்கள் வீட்டிற்கு வந்திருந்த போதுகூட உங்களுடன் பேசவேண்டுமென்ற ஆவலுடன் இருந்தேன். ஆனால் நீங்கள் பயந்தபடியிருந்தீர்கள். என்னைப் பார்ப்பதற்காக நீங்கள் கல்லூரி நேரத்தையும் படிப்பையும் வீணுக்கிக்கொண்டு பஸ்களில் அலையவேண்டாம். பலர் பலவிதமாகப் பேசுவதை நான் விரும்பவில்லை. எங்கள் வீட்டிற்கே நீங்கள் வந்து போகலாம். என் தந்தையிடம் உங்களைப்பற்றிக் கூறியிருக்கிறேன். அவர் என் விருப்பத்திற்கு மாருக நடக்கமாட்டார். ஆகவே என் வீட்டிற்கு வருகை தருமாறு கேட்டுக்கொள்கிறேன்:

உங்கள் வரவை அன்புடன்
எதிர்நோக்கும்,
வசந்தா.

பாஸ்கரன் வந்ததும் அவனிடம் கடிதத்தைக் கொடுத்தார். அவன் படித்துவிட்டு அதை பையில் வைத்துக்கொண்டான்.

"என்னடா! இரண்டாவது கடிதமா?"

"ஆமாம். இரண்டாவது கடிதம். ஆனல் இது உண்மையான கடிதம்."

சோமநாதரின் பதிலை எதிர்பார்க்காமல் சென்றுன் பாஸ்கரன் ஒரு வெற்றிப் புன்னகையோடு.

டெலிபோன் நெ. 22

மலாயாத் தமிழர்களுக்கு ஓர் நற்செய்தி!

அவ்வை புத்தக நிலையம்

142, ஜாலான் இட்ரீஸ்-கம்பார். (மலாயா)

எங்களிடம்!

தமிழ்நாட்டின் பிரபல எழுத்தாளர்களின் கருத்தோவியங்களும் அறிவூட்டும் நாவல்களும் துப்பறியும் கதைகளும் சைவ சித்தாந்த நூற்பதிப்புக் கழக வெளியீடுகளும், (சினிமா) கதை வசனபாட்டு புத்தகங்களும், கலர் படங்களும், தாயகத்திலிருந்து வரும் வார, மாத பத்திரிகைகளும், ஸ்டேசனரி சாமான்களும், காலண்டர் மற்றும் ஆங்கில காமிக்ஸ், மெக்கிசன் & நாவல்களும் மலாய் நாவல்களும் எப்பொழுதும் கிடைக்கும்.

குறிப்பு: வியாபாரிகளுக்கு தக்க கழிவு உண்டு.

வெளியூர் ஆர்டர்கள் தாமதமின்றி கவனிக்கப்படும். உடன் தொடர்பு கொள்க.

AVVAI BOOK STORE

142, JALAN IDRIS, KAMPAR. Tel. No. 22. PERAK, MALAYA.

கிளை நிலையம்: அவ்வை புத்தக நிலையம், 9, புரூஸ்டர் ரோடு, ஈப்போ.

AVVAI BOOK STORE, 9, Brewster Road, IPHO. Tel. No. 4756.

REGD No. 13817.

தமிழ் நாட்டில் தலை சிறந்த

வெண்சங்கு சீயக்காய்தூள்

எங்கும் கிடைக்கும்

எங்களிடம் தயாராகும் மணத்தில் சிறந்த

செல்வம்-ராணி ஊதுபத்திகளை

வாங்கி உபயோகியுங்கள்

தயாரிப்பாளர் :- வெண்சங்கு சீயக்காய்தூள் தொழிற்சாலை

3037-38, டபீர் குளம் ரோடு, தஞ்சாவூர்.